Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு    விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
வங்கிக் கணக்கு தேவையில்லை.
தரகு (Commission) ஏதுமில்லை:
எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 0602212472
(சி/2228)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 01 (23.03.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:174

# வடபகுதி கடற்படைத் தளங்களுக்கு தளபதி தயா சந்தகிரி இரகசிய விஜயம்!

## போர்த் தயாரிப்பு நிலைகள் குறித்து மதிப்பீடு



(யாழ்ப்பாணம்)

**கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி உயர்மட்ட கடற்படை அதிகாரிகள் சகிதம் குடாநாட்டிலுள்ள கடற்படைத் தளங்களுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு - கடற்படையினர் மற்றும் அதிகாரிகள் போருக்கான தயார் நிலையில் இருக்கின்றார்களா என மதிப்பீடு செய்ததாக தெரியவருகிறது.**

கடந்த வார இறுதியில் கடற்படைத் தளபதியின் இந்த விஜயம் இடம் பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கடந்த வாரம் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கடற்படையின் நடவடிக்கை இயக்குனர் றியர் அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் கடற்படையின் புலனாய்வு இயக்குனர் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் சகிதம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு கடற்படைத் தளபதியாக உபாலி ரணவீர புதிதாக நியமனம்!

(கொழும்பு)

றியர் அட்மிரலாக பதவிஉயர்த்தப்பட்ட உபாலி ரணவீர கடற்படைகளின் கிழக்கு பிராந்திய தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உபாலி ரணவீர மற்றும் வசந்த தென்னக்கோன் ஆகியோருக்கு கடற்படைத்தலைமையகம் கடந்த வாரம் பதவி உயர்வுகள் வழங்கியுள்ளது.

றியர் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்ட இருவரில் உபாலி ரணவீர கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதியாக நியமிக் கப்பட்டிருக்கும் அதேவேளை, வசந்த தென்னக்கோன் பாகிஸ்தான் தேசியப் பாதுகாப்பு கல்லூரியில் கற்கை நெறி ஒன்றுக்காக அனுப்பப்பட்டுள்ளார்.

கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக இருந்த றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட பதவி உயர்வு பெற்றுச் சென்றதையடுத்தே, றியர் அட்மிரல் உபாலி ரணவீர கிழக்கிற்கான தளபதியாக நியமிக்கப்பட்டிக்கிறார்.

றியர் அட்மிரல் வசந்த கரன்ன கொட மேற்குப் பிராந்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தலைமையுடன் தொடர்பு வைக்கக்கூடாது!

## மட்டு - அம்பாறை மக்களுக்கு கருணா குழு எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் வாழும் தமிழ்மக்கள் எவரும் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் எதுவித தொடர்புகளையும் வைத்திருக்கக்கூடாதென கருணா குழுவினர் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அந்த மாவட்ட மக்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தற்போது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் எழுந்துள்ள நிலையை அடுத்து - இந்தப்பகுதிகளில் வாழும் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் தொடர்புகள் வைத்திருப்பதோ, அவர்களின் வேண்டுகோளின்படி இந்த இரு மாவட்டங்களிலும் அனாமதேய துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவதோ, விநியோகிப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் தொடர்புகள் வைத்திருப்பவர்கள் தொடர்பாகவோ மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் யாராவது நடமாடினாலோ தமக்கு தகவல். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுயேட்சை வேட்பாளர் வன்னியில் விலகினார்

(வவுனியா)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சைக்குழு சார்பாக வன்னி மாவட்டத்தில் போட்டியிடவிருந்த வேட்பாளர் ஒருவர் தனது வேட்புமனுவை வாபஸ் பெற்றுள்ளார்.

மனனார் வீதி, பூவரசங்குளம், வவுனியா என்ற முகவரியுடைய இரத்தினம் விக்னேஸ்வரமூர்த்தி என்ற வேட்பாளரே தனது மனுவை வாபஸ் பெறுவதாக கடிதம் மூலம் வன்னி மாவட்ட செயலகத்துக்கு தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி வாக்காளர்களுக்கு பணம் அனுப்பிய வேட்பாளர்!

(கிளிநொச்சி)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழு வேட்பாளர் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்கள் சிலருக்கு கடிதத்துக்குள் பண நோட்டுக்களை வைத்து அனுப்பியிருப்பதாக அங்கிருந்து வெளியான தகவல்கள் தெரிவித்தன.

அது குறித்து மேலும் தெரியவருவதாவது-

சுயேட்சைக்குழுவாகப் போட்டியிடும் வேட்பாளர் தனக்கு முன்னரே அறிமுகமான வாக்காளர்கள் சிலருக்கு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

தனது சுயேட்சைக் குழுவுக்கு வாக்களிக்கக் கோரும் கடிதம் மற்றும் பிரசுரங்களுடன் அவர் பண நோட்டுக்களையும் அனுப்பிவைத்திருக்கிறார்.

ஆனால் - இவர் கடிதம் மூலம் பணம் அனுப்பிய வாக்காளர்களில் அநேகமானோர் இறந்துவிட்டதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

# பல்கலைக்கழக பரீட்சை முறைகேடு விசாரணைக்குழு அமைக்கப்படும்!

## பட்டமளிப்பு விழா திட்டமிட்டபடி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இறுதி வருடப் பரீட்சைகளில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் முறைகேடுகள் குறித்து ஆராய விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையில் சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் துறையைச்சேர்ந்த மாணவர்களே தமது இறுதி வருடப் பரீட்சை மற்றும் பெறுபேறுகளில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக பல்கலைக்கழக நிர்வாகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து, பல்கலைக்கழக நிர்வாகம் இவை தொடர்பாக விசாரணை நடத்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல் தலைமையிலான குழுவொன்றை நிறுவவுள்ளதாகவும் அந்தக்குழு இவை தொடர்பாக விசாரணைகளை நடத்தி முடிவுகளை அறிவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் ஆராயுமாறு இந்திய அரசு கோரிக்கை!

## பொடா மறுஆய்வுக்குழு விசாரிக்கும்

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கக்கோரும் மனுவொன்று மத்திய அரசிடமிருந்து வந்துள்ளதாக அந்த மனுவை பொடா மறுஆய்வுக்குழு பரிசீலனை செய்யவுள்ளதாகவும் பொடா மறுஆய்வுக் குழுவின் தலைவர் சக்காரியா தெரிவித்தார்.

நேற்று பொடா சட்டம் சம்பந்தமான விசாரணை நடைபெற்றபோதே சக்காரியா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இந்த மனுவைப் பற்றி நாங்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை.

2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி தமிழ்த்தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் பொடா சட்டத்தின் கீழ் தடை செய்ததை மத்திய அரசு பரிசீலனை செய்து தடையை நீக்கவேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார். இந்த மனு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டது.

மீண்டும் ஒரு மனுவை மத்திய அரசுக்கு நெடுமாறன் (12ஆம் பக்கம் பார்க்க)

## உறுதிமொழியை அடுத்து

# பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

தனது இறுதிவருடப் பெறுபேறுகளில் முறைகேடு நிகழ்ந்துள்ளதாகத் தெரிவித்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்த யாழ்.பல்கலைக் கழக மாணவனின் போராட்டம் சிரேஷ்ட மாணவ ஆலோசகரின் தலையீட்டையடுத்து கைவிடப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறையைச் சேர்ந்த இறுதிவருட மாணவனான (இம்முறை பட்டம் பெறவேண்டிய மாணவனான) வை.சுதாகர் என்பவர் தனது இறுதி வருடப் பெறுபேறுகளில் முறைகேடுகள் நடந்திருப்பதாகத் தெரிவித்து சாகும்வரை உண்ணாவிரதப் போராடடத்தினை ஆரம்பித்திருந்தார்.

இவர் நேற்றுக்காலை 9 மணியளவில் தனது போராட்டத்தை ஆரம்பித்தவேளை அங்கு சென்ற யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி ப.புஷ்பரட்ணம் அவரது விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக அறிவித்ததை அடுத்து இந்தப் போராட்டம் தொடங்கிய உடனேயே கைவிடப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## யாழ். குடாநாட்டில்

# அனுமதிப் பத்திரங்களை பரிசோதிப்பதில் போக்குவரத்துப் பொலிஸார் தீவிரம்!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக போக்குவரத்து பிரிவுப் பொலிஸார் தீவிர சோதனைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

குடாநாட்டில் முக்கியமான வீதிகள் மற்றும் சந்திகளிலும் மோட்டார் சைக்கிளில் வரும் பொலிஸாரால் திடீரென மேற்கொள்ளப்படும் சோதனைகளின்போது சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப்பத்திரம் மற்றும் வரிப்பத்திரம் என்பன பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், தலைக்கவசம் அணியாது செல்வோர் மற்றும் வேகமாகப் பயணம் செய்வோர் தடுத்து நிறுத்தப்பட்டு குற்றப்பணம் அறவிடப்படுவதுடன், சிலர் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

சில இளைஞர்கள் பொலிஸார் தடுத்துநிறுத்திய போதிலும் இலாவகமாக ஏமாற்றிவிட்டுத் தப்பிச்சென்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத அநேகமானவர்களுடைய மோட்டார் சைக்கிள்களே விபத்துக்குள்ளாகி வருவதையடுத்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குப் பணிக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, குற்றப்பணத்தை செலுத்தாத நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### சைக்கிள் திருட்டு

பலாலியைச் சேர்ந்தவரும் புலோலி தெற்கில் இடம்பெயர்ந்து வசிப்பவருமான என்.மகிபாலன் என்பவரது வீட்டினுள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி திருட்டுப் போயுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறை பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (17)

### பசுக்கன்று வளர்ப்பு பயிற்சி வகுப்பு

பசுக்கன்று வளர்ப்புப் பற்றிய பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி கோண்டாவில் அரச கால்நடை வைத்தியப் பணிமனை மூலம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொள்ள ஆர்வமுடைய பண்ணையாளர்கள் இன்று தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தமது வரவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவர்களுக்காக காலை விரிவுரைகளும், மாலை வீடியோப் படக்காட்சியுடன் கூடிய விளக்கங்களும் கொடுக்கப்படும்.

மேலும், இவர்களுக்காக எப்.எ.ஓ. திட்டத்தின் மூலம் பல உதவிகள் வழங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண கால்நடை வைத்தியர் தெரிவித்தார்.

### விசேட பொதுக்கூட்டம்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தென்மராட்சிக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் நாளை மாலை 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே, தென்மராட்சிக் கிளையின் ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி கிளைச் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

# பத்து விவசாய வங்கிகள் குடாநாட்டில் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு விவசாயிகளுக்கு சேமிப்பு மற்றும் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வசதியாக விவசாய வங்கிகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை கமநல திணைக்களம் மேற்கொண்டு வருவதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.குடாநாட்டு விவசாயிகளிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் வசதியாக இந்த வங்கிகள் அமைக்கப்படவிருக்கின்றன.

குடாநாட்டிலுள்ள 10 கமநல சேவைத் திணைக்களங்களிலும் ஒரு பிரிவாக இந்த வங்கிகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தமது சேமிப்புக்களை செய்வதற்கும், கடன்களை மீள செலுத்தல் போன்ற பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இந்த வங்கிகள் அமைக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

### திருநெல்வேலியில் சுரேஸ் அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் அலுவலகம் ஒன்று பரமேஸ்வராச் சந்தியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த திங்கள் முதல் இயங்க ஆரம்பித்துள்ள இந்த அலுவலகத்தில் தேர்தல் ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. (111)

### பன்றியுடன் மோதி குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வீதிக்குக் குறுக்கே சென்ற பன்றியுடன் மோதியதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் கல்வயல்- மட்டுவில் வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கதிரவன் குணரத்தினம் (வயது 53) என்பவரே காயமடைந்த நிலையில், சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (34)

### விசர்நாய் கடித்து வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய் கடிக்கு இலக்காகிய வயோதிபர் ஒருவர் ஒரு மாதத்திற்குப் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

யாழ்.நகரிலுள்ள சிவன் கோயிலடியில் வசித்துவந்த வேணுகோபால் (வயது 62) என்பவரே மரணமானவராவார்.

### குருபூஜை விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 23 ஆவது ஆண்டு குருபூஜை ஆராதனை விழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன குருமூர்த்தத்தில் நடைபெறும் இந்த விழாவில் காலை 10 மணிக்கு யாகபூசையும், 11 மணிக்கு குருமூர்த்தத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தியநாத சுவாமிக்கு சங்காபிஷேகமும் நடைபெற்று பகல் 12 மணிக்கு திருமுறை அர்ச்சனையும், கோபூசையும் நடைபெறும்.


கொள்கைக்கான தேர்தல் - 2004 - ஏப்ரல் - 02



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
யாழ்.மாவட்ட வேட்பாளர்
செல்வராஜா கஜேந்திரன்
முன்னாள் யாழ்.பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியதலைவரும், சர்வதேச தமிழீழ மாணவர்
பேரவைத் தலைவரும்.
மக்களினதும், மாணவர்களினதும்
உரிமைக்காக குரல்கொடுத்த கஜேந்திரனுக்கு
எமது விருப்பு வாக்கினைச்
செலுத்தி அவரை
வெற்றியடையச் செய்வோம்.

X 10

எமது நிலம் எமக்கு வேண்டும் (668)
வடமராட்சி கிழக்கு மக்கள்

ராஜா யாழ்ப்பாணம்.

சூர்யா, த்ரிஷா நடித்த



மௌனம் பேசியதே

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2263)

நிறைஞ்சனாஸ் சங்கானை

பார்த்தீபன், விக்னேஸ், உமா நடித்த

சூரி

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

Chicken Run

(சி-2262)

யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

அழகும், கலைத்துவமும் மிக்க
நவீன முறையிலான நம்பகமான இடம்
சுரபி பதிப்பகம்
பத்திரிகைகள், விழா மலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள்,
பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள்
மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 5107

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
இல்ல தடகளப் போட்டி - 2004

காலம் - 23.03.2004 செவ்வாய்க்கிழமை
நேரம் - காலை 9.00 மணி
இடம் - வீர சங்கிலியன் விளையாட்டு மைதானம் (யா.தே.க.க)

தலைவர்
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
பிரதம விருந்தினர்
கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
(தமிழ்த்துறை யாழ்.பல்கலைக் கழகம்)
பரிசில்கள் வழங்கல்
திருவாட்டி மைதிலி விசாகரூபன் M.Sc
(கலாசார உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்)
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யாழ்.தே.க.க.

போட்டி சிறப்புற வாழ்த்துவோர்
E.S. பேரம்பலம் & சன்ஸ்
50-52-54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 021-222-2988 Fax - 021 222 2368
(சி2338)

# ஜனாதிபதி கூறும் வாக்குறுதிகளை வட-கிழக்கு மக்கள் ஏற்கவில்லை!

## பிரதமர் ரணில் கூறுகிறார்

**தேர்தல் கூட்டங்களில் ஜனாதிபதி கூறிவரும் கருத்துக்களையும், உறுதிமொழிகளையும் வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் நகைப்புடன் நோக்குகின்றனர்.**

**இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**நேற்றுமுன்தினம் தியத்தலாவ, வெலிமட, நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது -**



இந்த நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க முற்பட்டவேளை, ஜனாதிபதி மூன்று தடவை தடையேற்படுத்தினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி - விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகம் குறித்த திட்டவரைபு அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என்று கூறுகின்றது.

ஆனால், ஜே.வி.பி. விடுதலைப் புலிகளுடன் புதிதாக ஒப்பந்தம் செய்து அதன்மூலம் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் எனக் கூறிவருகின்றது.

இவ்வாறு கருத்துக்களில் முரண்பட்டுக்கொண்டிருக்கும் இரு தரப்பும் எவ்வாறு சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும். விடுதலைப் புலிகளும் இதனையே கேட்கின்றனர்.

ஜனாதிபதி - தமிழீழ விடுதலைப் புலிகள் தம்முடன் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறிய கருத்தினை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிராகரித்துள்ளார்.

நாட்டில் தற்சமயம் நிலவும் போர்நிறுத்தம் நிரந்தர சமாதானமாக மாறுவதற்கு பல தடைகளைத் தாண்டிச்செல்ல வேணடும். இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்வைத்திருக்கும் சமாதான முன்னெடுப்புக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதியால் மாற்றுத் திட்டத்தை இதுவரை முன்வைக்க முடியவில்லை. வடககு-கிழக்கு மக்களுக்காக குரல் கொடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளால் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த முடியும்.

ரோக்கியோ பிரகடனத்தின்படி 10 நிபந்தனைகளின் கீழேயே பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது.

எனினும், நாம் ஆட்சிக்கு வந்தால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தப்படும் என ஜனாதிபதி கூறுவது சமாதான முயற்சிகளை இடையில் முறிக்கும் செயலாகும் எனக் குறிப்பிட்டார்.

# ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்தால் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரங்கள்!

## மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தால், சுயாதீன ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரங்களையும் வழங்கப்போவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுபபினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சில பொலிஸார் கட்சி சார்பாக நடந்து கொள்வதால், தமது முன்னணியின் தேர்தல் பிரசாரத்திற்கு பாதகமாக அமைந்துள்ளது.

அதேவேளை தற்சமயம் பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாட்டினால் தேர்தல் வன்முறைகள் கடந்த காலஙகளைவிடக் குறைந்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தால், பொலிஸ் ஆணைக்குழு கலைககப்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினா் அநுரபண்டார நாயக்க - மாவ பகுதியில் வைத்து வெளியிட்ட கருத்துத் தொடர்பாக ஊடகவியலாளர்கள் மங்கள சமரவீரவிடம் கேட்ட போது, அவர் அதற்கு பதிலளிக்கையில் அநுர பண்டாரநாயக்கவின் கருத்தை நிராகரித்தார்.

# ஊடகங்களில் பிரசார விளம்பரங்களை ஒலி, ஒளிபரப்புவதற்கு தடைச் சட்டம்

அரசியல் பிரசார விளம்பரங்களை ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்புவதற்கு எதிரான தடைச்சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

இத்தகையதொரு விளம்பரத் தடைச்சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளமை இலங்கையின் வரலாற்றில் இதுவே முதற்தடவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளரினால் ஒழுங்கு செய்யப்பட்ட அரச மற்றும் தனியார் ஊடகத்துறையினருடனான கலந்துரையாடலில், பக்கச் சார்பற்ற முறையில் செயற்படுவோம் என ஊடகத்துறையினா் உத்தரவாதம் வழங்கத் தவறும் பட்சத்தில் இந்தத்தடைச்சட்டம் தேர்தல் ஆணையாளரினால் அமுல்படுத்தப்படலாம் எனவும் நம்பப்படுகிறது.

தேர்தல் ஆணையாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக்கூட்டத்தில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அரசியல் விளம்பரத் தடைச்சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து சட்டவல்லுநர்களின் உதவிகளும், தேர்தல் ஆணையாளரினால் பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டு நிதியில் தேர்தல் கண்காணிப்பு விசாரணைகள் நடத்தக் கோரிக்கை

வெளிநாடுகளிலிருந்து பெருமளவு பணத்தை பெற்று, 2 அமைப்புக்கள் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருப்பது தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்த நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகளுக்கு எதிரான மையம் மற்றும் பவரல் அமைப்பு என்பவற்றுக்கு இதுவரை வெளிநாடுகள் 85 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளன.

இந்த நிதிமூலம் என்ன செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை எவரும் அறியவில்லை.

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும் சிலர் -கட்சிகளுக்கு சார்பாக நடந்துகொள்வதாகவும், ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்வதாகவும் சுசில் பிரேம் ஜெயந்த குற்றம் சுமத்தினார்.

### அலங்கார உற்சவம்

பருத்தித்துறை மருதடி ஞான வைரவர் சுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

இந்த அலங்கார உற்சவம் தொடர்ந்த 17 தினங்கள் நடைபெறவுள்ளது.

ஏப்ரல் 4 ஆம் திகதி தீர்த்த உற்சவமும், 5 ஆம் திகதி வைரவர் சாந்தி உற்சவமும், 6 ஆம் திக்தி பூங்காவன உற்சவமும் நடைபெறவுள்ளது. (17)

# உறவினரை வைத்து சந்திரிகா கருத்துக்கணிப்பை நடத்தினார்!

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

ஜனாதிபதி சந்திரிகாவின் தனிப்பட்ட உறவுமுறையைக் கொணட அரச சார்பற்ற நிறுவனததின் தலைவர்- ஐக்கிய மக்கள் முன்னணிக்கு சாதகமாக அமையும் வகையில் கருத்துக்கணிப்பொன்றை வெளியிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆதாரம் அற்ற ஆய்வுகளைக் கொண்டு அரச ஊடகத்தின் மூலம் இந்தக் கருத்துக் கணிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வின்படி 61 வீதம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், 29 வீதம் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சார்பாக தேர்தல் முடிவுகள் வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, அடிப்படையான தேர்தல் நடைமுறைகளை அறிந்தவர்கள் இந்த கருத்துக் கணிப்பை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இதன் உண்மைத் தன்மை தொடரபான விபரங்களை விரைவில் வெளியிடுவோம் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாம் அறிந்த வகையில் ஜனாதிபதியின் நெருங்கிய உறவினர்களே இந்த கருத்துக் கணிப்பின் பின்னணியல் இருக்கின்றார்கள் எனவும், இந்தக் கருத்துக்கணிப்பு நாடகம் விரைவில் அம்பலப்படுத்தப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திலிருந்து பலர் விலகிவிட்டதாகவும், அநேகமான அங்கத்தவர்களுக்கு இந்த நிலையம் நடத்திய கருத்து கணிப்புத் தொடர்பாக எதுவுமே தெரியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# திருகோணமலை நிலவரம் குறித்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆராய்வு

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் - திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்து, அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பெயின் நாட்டவர்களான எட்வான்றோ அல்வாடோ அசிவடோ, செல்வி புளொரன்ஸ் பல்தாலியோ ஆகியோர் இந்த மாவட்டத்திலுள்ள பல்வேறு மட்டப் பிரதிநிதிகளையும் சந்தித்து தேர்தல் கண்காணிப்புப் பணிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்..

திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனையும் அவரது இல்லத்தில் சந்தித்து இவர்கள் உரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிப்பதற்கென 15 வாக்களிப்பு நிலையங்கள் கொத்தணி முறையில் அமைக்கப்படவுள்ளதாக இந்தச் சந்திப்பின்போது இரா.சம்பந்தன் கண்காணிப்பாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு இடம்பெறும் போது முழுநாளும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சில சர்வதேச தேரதல் கண்காணிப்பாளர்களும் திருகோணமலை மாவட்டத்துக்குச் செல்லவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# தப்பியோடிய படையினரை தேர்தல் பணியில் ஈடுபடுத்த தடை

படைகளிலிருந்து தப்பியோடிச் சென்ற படையினரை தேர்தல் கடமைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என பாதுகாப்பு அமைச்சுக்கு பொறுப்பான ஜனாதிபதி - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணிக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பான வன்செயல்களுடன் தொடர்புடைய முன் னாள் இராணுவத்தினரும் தேர்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதாக பொலிஸார் தெரவித்துள்ளனர். இதுவரை தேர்தல் வன்செயல்களுடன் தொடர்புடைய சுமார் 110 முன்னாள் இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தப்பியோடிய இராணுவ வீரர்களை அரசியல் வாதிகள் தமது மெய்ப்பாதுகாப்பாளர்களாக, தேர்தல் கடமைகளுக்கு பயன்படுத்தி வருவதாக, உளவுப்பிரிவு ஜனாதிபதிக்கு தகவல் வழங்கியுள்ளது.

# ஜனாதிபதியின் தற்போதைய எண்ணம் வீரவன்சவின் தேவையை நிறைவேற்றுவதே

## முதன்மை வேட்பாளர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

மாகாணசபை அதிகாரங்களைக் கூடத் தமிழர்களுக்கு அளிக்க விரும்பாத ஜே.வி.பி - தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது வெறும் பொயயான விடயமென கொழுமபு மாவட்ட புதிய இடதுசாரி முன்னணியின் முதன்மை வேட்பாளர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

சமாதானத்திற்காக யுத்தம் என்ற ஜனாதிபதி சந்திரிகா, இப்போது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்கிறார்.

சகல மக்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வினை தானும் விரும்புகிறேன் என்கிறார். தற்போது ஜனாதிபதியின் எண்ணம் விமல் வீரவன்சவின் தேவைகளை நிறைவேற்றுவதே. இவ்வாறான தலைவர்களினால் நாட்டுக்கு கிடைக்கப்போகும் நன்மை என்னவென மக்கள் சிந்திக்க வேண்டும்.

மீண்டும் நாட்டில் யுத்தம் ஒன்றை ஏற்படுத்தவே ஜே.வி.பி முயற்சிக்கின்றது. இன்று அமெரிக்காவின் கையளாகச் செயற்படும் அநுரா பண்டாரநாயக்கவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு வாக்குக் கேட்கின்றது. விமல் வரவன்சவும் அவரது சகாக் களும் பொதுவுடமை பற்றி பேசிக் கொண்டு சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச்சேர்கின்றனர்.

எதிர்வரும் காலங்களில் பொதுவுடமை என்ன விலை என ஜே.வி.பி கேட்கும் நிலை ஒன்று உருவாகும். இவர்கள் சிறுபான்மை மக்களுக்கு செய்வது என்ன?

இனவெறியால் பித்தலாடிக் கொண்டிருக்கும் விமல் வீரவன்சவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜனாதிபதி - மதவெறி பிடித்துத் துள்ளுகிறார்.

இதனால், இந்த நாடு அடிப்படைவாதத்தினை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளது என அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார். (01)

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ் உதைபந்தாட்ட லீக் நடாத்தும் உதை பந்தாட்டப் போட்டியில் நாளை மாலை 5 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நாவாந் துறை சென்.நிக்கலஸ் அணியை எதிர்த்து சென்.மேரிஸ் அணி மோதும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் மாலை 5 மணிக்கு நடைபெறும் போட்டியில், யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி போட்டியிடும் என போட்டிக் குழுத் தலைவர் எஸ்.கணநாதன் தெரிவித்தார்.

## ஆறு விக்கெட்டுக்கள் இழப்புக்கு இங்கிலாந்து 300 ஓட்டங்கள்!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ரினிகாட்டில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி ஆறு விக்கெட் இழப்பிற்கு 300 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டு விக்கெட் இழப்புக்கு 54 என்ற ஓட் டத்துடன் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி, மூன்றாம் நாளில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதன் மூலம்



மேற்கிந்தியத் தீவுகள் அணியை விட 92 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

இங்கிலாந்து அணி சார்பாக கிரஹாம் தோப் ஆட்டமிழக்காமல் 81, ஜில்ஸ் 28 ஓட்டங்களைப் பெற்று ஆடிக் கொண்டிருந்தனர்.

புட்சர் 61, நசார் ஹுசைன் 58, பிளினரொப் 23 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பெஸ்ட் 3, கொலின்ஸ் 2 சிமித்1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# இந்தியா 5 விக்கெட்டுக்களால் பாகிஸ்தானை தோற்கடித்தது!



முகமட் கைவ்

(லாகூர்)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லாகூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டியின் நான்காவது ஆட்டத்தில் இந்தியா ஐந்து விக்கெட்டுக்களால் பாகிஸ்தானை தோற்கடித்தது.

நேற்றுமுன்தினம் பகல் இரவாக நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர், முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, எட்டு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவதாக அப்ரிடியின் விக்கெட்டை இழந்தது. அப்ரிடி மூன்று ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இதன்பின்னர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் யாசிர் ஹமீட்டுடன் இணைந்தவர் யொகானா. இவரையும் நிலைத்து நின்று ஆட இந்தியப் பந்து வீச்சாளர் இர்பான் பதான் விடவில்லை. இவரும் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 39.

இதன்பின்னர் யாசிர் ஹமீட்டுடன் இணைந்தவர் அணித்தலைவர் இன்ஸமாம் உல் ஹக். இந்த ஜோடி சிறப்பாக விளையாடி, இணைப்பாட்டமாக 50 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யாசிர் ஹமீட் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இன்ஸமாம் உல் ஹக்குடன் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்தவர் யுனுஸ்கான் (இது இவரது நூறாவது ஒருநாள் போட்டியாகும்). இருவரும் சிறப்பாக விளையாடி இணைப்பாட்டமாக 105 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், யுனுஸ்கான் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் அப்துல் ரசாக் - இன்ஸமாம் உல் ஹக்குடன் இணைந்தார். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 70 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் அப்துல் ரசாக் 24 பந்துகளில் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இவர்களது இணைப்பாட்டத்திலேயே இன்ஸமாம் உல் ஹக்கும் தனது சதத்தை எட்டினார். அதன் பின் அவரும் 4 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகள் அடங்கலாக 121 பந்துகளில் 123 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இதன்பின்னர் மொயின்கானும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். இறுதியில் பாகிஸதான் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 293 என்ற பெரியதொரு இலக்கை அடைந்தது. பாகிஸ்தான் அணி கடைசி 10 ஓவர்களிலும்

**விளையாட்டு**

95 ஓட்டங்களை குவித்ததும் குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் இர்பான் பதான், பாலாஜி, சகீர்கான், கார்த்திக் நால்வரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் டெண்டுல்கர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 294 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற பெரிய இலக்குடன் ஆடத் தொடங்கிய இந்திய அணி 94 ஓட்டங்களுக்குள் நான்கு விக்கெட்டுக்களை இழந்து, மிகவும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதன்பின் ராவிட்டுடன் ஐந்தாவது விக்கெட் இணைப்பாட்டமாக இணைந்த யுவராஜ் ஜோடி சிறப்பாக விளையாடிய போதும் அணி



இன்சமாம் உல் ஹக்

162 ஓட்டங்கள் பெற்ற நில்லையில் யுவராஜ் சிங் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஆறாவது விக்கெட் இணைப்பாட்டமாக ராவிட்டுடன் ஜோடி சேர்ந்தவர் முகமட் கைவ். இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காது இந்திய அணியை வெற்றிப் பாதைக்குக் கொண்டுசென்றனர்.

பாகிஸ்தான் அணிக்கெதிராக ஆறாவது விக்கெட் இணைப்பாட்டமாக இவர்கள் இருவரும் பெற்ற 132 ஓட்டங்களே சாதனையாக உள்ளது. இறுதியில் இந்திய அணி 45 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்திய அணி சார்பாக ஷேவாக் 26, லக்ஷ்மன் 20, கங்கூலி 21, யுவராஜ்சிங் 36, ராவிட், கைவ் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 76, 71 ஓட்டங்களையும் டெண்டுல்கர் 7 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் - அக்தர், சமி இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், அப்துல் ரசாக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக இன்ஸமாம் உல் ஹக் தெரிவானார்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில், நடந்து முடிந்த நான்கு போட்டிகளிலும் இரு அணிகளும் 2:2 என்ற சமநிலையில் உள்ளன.

இறுதிப் போட்டி நாளை இதே மைதானத்தில் பகல் இரவு போட்டியாக இடம்பெறவுள்ளது.

## சதமடித்த போதிலும் கைநழுவிய வெற்றிகள்!

இந்திய - பாகிஸ்தான் இடையேயான 5 ஒரு நாள் போட்டித் தொடரில் இதுவரை நடந்த 4 ஆட்டங்களில் மொத்தம் 3 சதங்கள் அடிக்கப்பட்டன. இதில் எந்த அணி வீரர் சதம் அடித்தாலும் அன்றைய ஆட்டத்தில் அந்த அணி தோல்வியையே தழுவியிருக்கிறது.

கராச்சியில் நடந்த முதல் போட்டியில் இன்ஸமாம் உல்ஹக் சதம் (122 ஓட்டங்கள்) அடித்தார். அதில் பாகிஸ்தான் 5 ஓட்டங்களால் தோல்வி கண்டது. ராவல் பிண்டியில் நடந்த 2 ஆவது போட்டியில் டெண்டுல்கர் சதம் (141 ஓட்டங்கள்) அடித்தார். இந்திய அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தது.

லாகூரில் நேற்று நடந்த 4 ஆவது போட்டியில் இன்ஸமாம் சதம் (123) அடித்தார். ஆனால் பாகிஸ்தான் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்லியைத் தழுவிக் கொண்டது.

## தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்ட் நியூஸிலாந்து ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றி



கிறிஸ் கெயின்ஸ்

நியூசிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே ஒக்லண்டில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து ஒன்பது விக்கடெ்டுக்களால் வெற்றி பெற்றது.

முன்னதாக நான்காம் நாள் ஆட்ட முடிவில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 277 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அணி, இரண்டாவது இனிங்சில் 349 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. றுடோல்ப் ஆட்டமிழக்காமல் 154, கலிஸ் 77, கிப்ஸ் 61, பௌச்சர், பொலக் இருவரும் தலா 10, நிக்கிபோஜி 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

சிமித், மக்கன்சி ஆகியோர் ஓட்டம் எதனையும் பெற்றுக் கொடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில் மார்ட்டின் 5, கெய்ன்ஸ் 3, ஒரம், மக்மிலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

நியூசிலாந்து அணியின் கெய்ன்ஸ் 200 விக்கெட்டுக்களையும் 3000 ஓட்டங்களையும் பெற்ற ஆறாவது வீரர் என்ற பெருமையை இந்தப்போட்டியில் பெற்றுக் கொண்டார்.

கெய்ன்ஸ், மார்ட்டின் ஆகியோர் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தென்னாபிரிக்க அணி முதல் இனிங்சில் 296 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. இரண்டாவது இனிங்ஸ்சில் 349 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நியூசிலாந்து அணி தனது முதல் இனிங்சில் 595 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாவது இனிங்ஸில் 51 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது ஆட்டத்தை ஆரம்பித்த நியூசிலாந்து அணி, ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

நியூசிலாந்து அணி சார்பில் - பப்ஸ் 8, ஸ்ரீபன் பிளமிங் 31 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர்.

என்ரினியின் பந்து வீச்சில் நிக்கிபோஜியிடம் பிடிகொடுத்து 10 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ரிச்சர்ட்சன் ஆட்டமிழந்தார்.

நியூஸிலாந்து 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதன் மூலம் தென்னாபிரிக்காவுடனான 3 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் 1:0 என்ற நிலையில் முன்னணி வகிக்கின்றது.

இதுவரை நடைபெற்று முடிந்த தென்னாபிரிக்காவுடனான 29 டெஸ்ட் போட்டிகளில் நியூசிலாந்து நான்கு முறை வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை, நியூசிலாந்துக்கும் தென்னாபிரிக்காவிற்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி வரும் வெள்ளியன்று வெலிங்டன் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## ராஜிவ்காந்தி மகன் ராகுல் அமெதி தொகுதியில் போட்டி!



முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் மகன் ராகுல் காந்தி தீவிர அரசியலில் குதித்தார். அவர் உத்தரப்பிரதேச மாநிலம் - அமெதி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடவுள்ளார்.

ராஜீவ் காந்தியின் மறைவுக்குப் பின் அவரது மனைவி சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

அவரது மகன் ராகுல் காந்தி, மகள் பிரியங்கா ஆகியோரும் தீவிர அரசியலில் ஈடுபட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியினர் தொடர்ந்து வற்புறுத்தி வந்தனர்.

ஆனால் அவர்கள் தீவிர அரசியலில் ஈடுபடாமல் ஒதுங்கியே இருந்து வந்தனர்.

ஆனால், ராகுலும், பிரியங்காவும் தங்களது தாயார் போட்டியிட்டு வெற்றி பெற்ற உத்தரப் பிரதேச மாநிலம் அமெதி மற்றும் அருகில் உள்ள ரேபேரேலி ஆகிய நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு அவ்வப்போது சென்று மக்களை சந்தித்து பேசி வருகின்றனர். பிரியங்கா அமேதி உள்ளிட்ட சில தொகுதிகளில் தேர்தல் பிரசாரம் செய்துள்ளார்.

தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில் காங்கிரஸ் தலைவர்களின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் ராகுல்காந்தி நேற்று முன்தினம் திடீரென்று தீவிர அரசியலில் குதித்தார்.

அமெதி தொகுதியில் அவர் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடுகின்றார்.

ராகுல், அமேதி தொகுதியில் போட்டியிடுவதால் அவரது தயாரான சோனியா காந்தி ரேபேரேலி தொகுதியில் போட்டியிடுவார்.

கடந்த தேர்தலில் இந்த தொகுதியில் ராஜீவ் காந்தியின் குடும்ப நண்பரான சதீஷ்சர்மா போட்டியிட்டு வெற்றி பெறறார். இந்த முறை அந்தத் தொகுதியில் சோனியா போட்டியிடுவார்.

அமெதியும், ரேபரோலியும் இந்திரா காந்தி குடும்பத்தினர் பலமுறை போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதிகள் ஆகும்.

## தேர்தல் பிரசாரத்திலும் கிரிக்கெட் ஒளிபரப்பு!

இந்தியத் துணைப் பிரதமர் அத்வானி, நேற்று முன்தினம் உத்தரப் பிரதேச மாநிலம் லலித்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.

நேற்றுமுன்தினம் இந்தியா - பாகிஸ்தான் இடையே கிரிக்கெட் போட்டி நடைபெற்றதால் அத்வானியின் கூட்டத்திற்கு போதுமான அளவு மக்கள் வராமல் போய்விடுவார்களோ என்று கட்சி அமைப்பாளர்கள் சந்தேகப்பட்டனர்.

இதனால் கூட்டம் நடைபெற்ற இடம் அருகே பிரமாண்டமான திரையில் கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பைக் காண்பித்தனர். இதனால் அங்கு கூட்டம் அலை மோதியது.

பின்னர் அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அத்வானி உரையாற்றினார்.

# திருடர்களின் புகலிடமாக பா.ஜ.க. மாறிவருகிறது!

## திருமாவளவன் குற்றச்சாட்டு



தமிழகம் எழுகிறது என்ற பிரசார முழக்கத்துடன் மக்கள் கூட்டணி தனது தேர்தல் வேலைகளை ஆரம்பித்துள்ளதாக விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

சேலம் நகரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இந்துத் துவ கொள்கை எதிர்ப்பு மாநாடு நடந்தது. போஸ் மைதானத்தில் நடந்த இந்த மாநாட்டில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டிற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் -

புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள், மக்கள் தமிழ்தேசம், இந்திய தேசிய லீக் ஆகிய கட்சிகள் இணைந்துள்ள மக்கள் கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் எட்டுத் தொகுதிகளில் போட்டியிடுகிறது.

சிதம்பரம், மயிலாடுதுறை, பாண்டிச்சேரி, ஸ்ரீபெரும்புதூர், தர்மபுரி, ராசிபுரம், பெரம்பலூர் மற்றும் மதுரை ஆகிய தொகுதிகளில் நாங்கள் போட்டியிடுகிறோம்.

எங்களது கூட்டணியில் பிரசார முழக்கமாக தமிழகம் எழுகிறது என்ற வாசகம் இருக்கும். இந்தியாவிலுள்ள பல்லாயிரக்கணக்கான குடிசை வீடுகளில் விளக்கொளிகூட இல்லாமல் வறுமை தாண்டவமாடுகிறது. ஆனால், இந்தியா ஒளிர்வதாக பா.ஜ.க. பொய்களைக் கூறி வருகிறது.

நடிகர், நடிகைகள் மற்றும் திருடர்களின் புகலிடமாக பா.ஜ.க. மாறி வருகிறது. வேட்பாளர்களைக்கூட தேர்வுசெய்ய முடியாமல் ஆட்கள் இல்லாத கட்சியாக மாறிவிட்டதால், போகின்ற வருகிறவர்களை எல்லாம கட்சியில் சேர்த்துக்கொண்டு அவர்களையே வேட்பாளர்களாக அறிவிக்கும் நிலைக்கு பா.ஜ.க. தள்ளப்பட்டுவிட்டது. சோனியா, வாஜ்பாய் ஆகியோரில் ஒருவர்தான் பிரதமராக வர வேண்டுமா? வேறு யாரும் வரக்கூடாதா? எங்களது கூட்டணியிலும் பிரதமர் வேட்பாளர் ஒருவர் உள்ளார். அவர் யாரென்பதை தேர்தல் பிரசாரத்தின்போது தெரிவிப்போம் என்றார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் இம்முறை ஒரு நாள் மட்டுமே திருவிழா

## நேற்றைய செயலகக் கூட்டத்தில் முடிவு

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்திருவிழா இந்த முறை ஒருநாள் மட்டுமே, கொண்டாடப்படும் என நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெற்றவுள்ள இந்தத் திருவிழா குறித்து - யாழ். செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பி.எல்.திலகநாயகம்போல் தலைமையில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதில் நெடுந்தீவு உதவி அரச அதிபர் ச. பேரானந்தன், ஊர்காவற்துறை பொலிஸ் அதிகாரி எஸ். மைக்கல், காங்கேசன்துறைப் பிரதேச கடற்படை அதிகாரி என். தேவேந்திரா, புங்குடுதீவு பிரதேச கடற்படை அதிகாரி கே.சி.பிரியதர்சன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி - இந்த முறை ஆலயத்திற்கான நிதி உதவி போதியளவு கிடைக்காமையால், ஒருநாள் மட்டுமே அங்கு திருவிழா நடத்துவது என்றும் முடிவாகியது. அந்தோனியார் ஆலயத்திற்கு வழிபாட்டிற்குச் செல்லும் மக்கள் தமக்கு வேண்டிய உணவு, குடிநீர் போன்றவற்றைத் தம்முடன் எடுத்துச் செல்லவேண்டும்.

மக்கள் போக்குவரத்திற்கு மூன்று படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும். வழிபாட்டுக்குச் செல்லும் மக்களிடம் அடையாள அட்டைப் பரிசோதனையைப் படையினர் மேற்கொள்ளமாட்டார்கள்.

ஆனால், அவர்களிடம் அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்படும். அதனை, திரும்பி வரும்போது படையினரிடம் வழங்கவேண்டும். இத்தகைய ஒழுங்குகளுடன் இந்தமுறை கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் திருவிழா இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)



கொக்குவில் நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலையம் அண்மையில் நடத்திய இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது. (111)

# யுவதியுடன் சேட்டைவிட முயன்ற இளைஞன் தப்பியோட்டம்

யுவதி ஒருவருடன் சேட்டைவிட முயன்ற இளைஞர் ஒருவர் - பொது மக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்ததனால் தப்பியோடினார்.

இந்தச்சம்பவம் சண்டிலிப்பாய் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த யுவதி சண்டிலிப்பாய் பகுதியிலுள்ள சட்டத்தரணி ஒருவரது வீட்டுக்குச் சென்றுள்ளார். இவர் செல்லும்போது இடைவெளியில் மோட்டார் சைக்கிளில் இளைஞர் ஒருவர் அவரை விலத்திச் சென்றுள்ளார்.

சட்டத்தரணி வீட்டில் அலுவல்களை முடித்துக்கொண்டு திரும்பிய யுவதியை - அந்த வீதியின் சன நடமாட்டம் குறைந்த பகுதியில் மறைந்து நின்ற இளைஞர் இம்சைப்படுத்த முயன்றுள்ளார். இதனால், அந்தப்பெண் கூச்சலிடவே அயலவர்கள் ஓடிவந்துள்ளனர். அயலவர்கள் வந்ததையடுத்து, குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள்பெரும் அதிர்ச்சி அடைந்திருப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் மேலும், நடைபெறாமல் இருக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தனர். (94)




யாழ்.நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையில் பேராளர் சங்கமம் அண்மையில் - நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றபோது, பிரதேச சனசமூக நிலையம் ஒன்றுக்கு மின் உபகரணங்களை மா.க.ஈழவேந்தன் வழங்குவதைப் படத்தில் காணலாம். (111)

# கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா சிறப்பாக நடத்த உதவவும்

## மேலதிக அரச அதிபர் வேண்டுகோள்

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவைச் சிறப்பாக நடதத பொதுமக்கள் முன்வந்து நிதியுதவி புரிய வேண்டும் - என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பி.எல். திலகநாயகம்போல் கேட்டுள்ளார்.

இது குறித்து நமது ஈழநாட்டிற்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது -

கச்சதீவு இலங்கைக்கு சொந்தமாக்கப்பட்டது முதல், அதனை இலங்கைக்குரிய தீவென ஞாபகப்படுத்தும் நிகழ்வாக - ஆண்டுக்கொரு முறை ஐந்துநாட்கள் நடைபெறும் அந்தோனியார் ஆலயத் திருவிழாவே விளங்குகிறது.

அந்தத் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதில் கிறிஸ்தவர்கள் ஆர்வமாக இருக்கின்ற போதும், அதறகு அரசாங்கம் எவ்வித உதவிகளையும் வழங்காமல் இருப்பது கவலைக்குரியதாகும்.

போதிய நிதி இன்மையால், இந்த முறை திருவிழாவை நடத்துவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. நீர் வழங்கல், உணவு விநியோகம் சுகாதார வசதிகள் ஆகிய வசதிகளற்ற நிலையிலேயே உள்ளன

இதற்கு, ஆர்வமுள்ள அனைதது மக்களும்தான் தீர்வு. காணமுன் வரவேண்டும். அழகிய தீவில் அமைதியாக குடியிருந்து, அருள்புரியும் அன்னையின் அருள் வேண்டுவோர் முன்வந்து பண உதவி செய்தால், அங்கு நிலவும் குறைபாடுகளைத் தீர்க்கமுடியும். குறிப்பாக, நிரந்தர மலசலகூட கட்டடம், கிணறு என்பன அமைக்கப்படுதல் வேண்டும். இவற்றிற்கு மக்கள் முன்வந்து உதவிபுரியவேண்டும்.

ஏனெனில், யாழ்.மறைமாவட்ட ஆயர் அருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையாலும், வேறு பல கிறிஸ்தவ அமைப்புக்களினாலும் அந்தத் தேவாலயத்திற்கு நிதி உதவி வழங்க வேண்டியதன் அவசியம்பற்றி கிறிஸ்தவ விவகார அமைச்சு உட்பட, அரசாங்கத்தின் முக்கியஸ்த்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரை எந்தவொரு நன்மையும் கிடைக்கவில்லை.

இதனாலேயே, பொதுமக்கள் தாமாக முன்வந்து இந்த ஆலயத்தில் திருவிழா சிறப்பாக இடம்பெறவும், சிறப்பான முறையில் ஆலயத்தை வடிவமைக்கவும் பொதுமக்கள் தம்மாலான உதவிகளை வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ப)

# மிதிவெடி வெடித்ததில் பொங்கல் பானை சிதறியது

(யாழ்ப்பாணம்)

பொங்கல் பானையின் கீழிருந்த மிதிவெடி வெடித்தில் பொங்கல் பானை சிதறியது. இந்தச் சம்பவம் அண்மையில் அளவெட்டி வடக்கு பெரியதம்பிரான் ஆலயத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும்தெரியவருவதாவது -

அளவெட்டியில் பகுதியிலுள்ள விவசாயி ஒருவர் தனது நேர்த்திக் கடனை நிறைவு செய்வதற்காக முன்றில் அடுப்பு வைத்துப் பொங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுப்பிற்குக் கீழே புதைக்கப்பட்டிருந்த மிதிவெடி - விறகு எரிந்தனால், ஏற்பட்ட வெப்பத்தில் வெடித்தது. இதனால், பொங்கல் பானை பல அடி தூரத்திற்குத் தூக்கி வீசப்பட்டு சிதறியது. இந்தச் சம்பவத்தில் பொங்கலில் ஈடுபட்ட விவசாயி சிறு காயங்களுக்குள்ளானார்.

பின்னர், புதிய பானை வைத்து பொங்கப்பட்டு நேர்த்திக்கடன் நிறைவு செய்யப்பட்டமை குறிப்பிட்டதக்கது. (94)

# வீடுகளைச்சுற்றி இராணுவம் நிற்பதால் புனரமைப்புச் செய்வதில் சிரமம்

அச்சுவேலியில் படையினரின் பாவனையிலிருந்து விடுவிக்கப்பட்ட சில வீடுகளைச் சுற்றிப் படையினர் காவலில் இருப்பதால், வீட்டு உரிமையாளர்கள் தமது கடமைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்கு அருகிலுள்ள பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கடந்த எட்டு வருடங்களாக இராணுவத்தினரின் பாவனையில் இருந்து வருகின்றது.

அவற்றை விடுவித்துத் தருமாறு கோரி, அந்தப் பகுதி வீட்டுச் சொந்தக்காரர்கள் - யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

எனினும், கடந்த மாதம் அந்தப் பகுதியில் உள்ள நான்கு வீடுகளை விடுவித்த படையினர் அவற்றை அந்தந்த வீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைத்தனர்.

வீட்டுச் சொந்தக்காரர் அந்த வீடுகளைப் புனரமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், அந்தப் பகுதி படையினர் பெருமளவில் பாதுகாப்புக் கடமையீல் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், வீட்டுச் சொந்தக்காரர்களிடம் பல்வேறு விசாரணைகளையும் நடத்திவருகின்றனர்.

இதனால், அவர்கள் தமது கடமைகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.(ப)

### மஹோற்சவ திருவிழா

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் - நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. காலை 11 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்று, தொடர்ந்து பதினொரு நாட்கள் மஹோற்சவம் நடைபெறவுள்ளது. (94)

# மினிபஸ் மோதியதில் இளைஞன் படுகாயம்

(சுதுமலை)

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்னால் - நேற்று காலை மினிபஸ் மோதியதில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வி.கிஷோக்குமார் (வயது 26) என்ற இளைஞன் படுகாயமடைந்து - யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இல 787, இல 788 தனியார் மினிபஸ் இரண்டும் ஒன்றை ஒன்று முந்திக்கொள்வதற்காக, வேகமாக சென்று கொண்டிருந்தவேளை, மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்னால் ஒரு மினிபஸ் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்தபோது இன்னொரு பஸ் - வீதியின் மறுபக்கத்தை பயன்படுத்தி முந்திச் செல்ல முற்பட்டபோது, எதிரே சைக்கிளில் வந்தவரை மோதியதில் தூக்கி வீசப்பட்ட அவர் அருகில் மதில் ஒன்றுடன் மோதி தலையில் படுகாயமடைந்தார். (71)

# சின்னஞ்சிறு செய்திகள்

### சர்வமத பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 127 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, எதிர் வரும் 31 ஆம் திகதி சர்வமதப் பிரார்த்தனை ஒன்று நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா நிலைய அறங்காவலர் குழுவினர் ஏற்பாட்டில், அறங்காவலர் குழுத் தலைவர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் தந்தை செல்வா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சர்வமதப் பிரார்த்தனையில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### போட்டோ பிரதி இயந்திரம் அன்பளிப்பு

(வடமராட்சி)

தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்கு - ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் போட்டோ பிரதி இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்த மகாவித்தியாலயத்தின் இலண்டன் பழைய மாணவர் சங்கம் - றோணியோ இயந்திரமொன்றையும் முன்னர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்த கதாகும். (17)

### தளபாடங்கள் அன்பளிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரிக்கு மேற்படி கல்லூரி பழைய மாணவர் சங்கம் நூல் நிலையத்திற்கும், பௌதிக ஆய்வு கூடத்திற்கும் தேவையான தளபாடங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்த தளபாடங்களை பழைய மாணவர்கள் சார்பில் கிராம அலுவலர் வி.சேதுநாயகம் அதிபர் எஸ். பத்மநாதனிடம் கையளித்துள்ளார். (17)

### முகமாலையில் தவறவிட்ட பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

முகமாலை சோதனைச் சாவடியில் கைவிடப்பட்ட பயணப் பொதிகளில் சில கொடிகாமம் பொலிஸாரால் - சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இதில் பொதி இலக்கம் 1 எஸ் மரியதாஸ் (இல. 215 கடற்கரை வீதி, நாவாந்துறை), பொதி இலக்கம் 2 எஸ்.மீனாட்சியம்மா (கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்), பொதி இலக்கம் 13 சு.சிவபாக்கியம் (இல. 41 குடியிருப்பு, வவுனியா) என அடையாளம் காணப்பட்டுள்ளன. (34)



# இயந்திர வாகன ஓட்டி



தற்போது கார்கள் மற்றும் வாகனங்களில் செல்லுபவர்களுக்குப் பதிலாக இயந்திர மனிதர்களைப் பயன்படுத்தும் ஆராய்ச்சியில், அமெரிக்கப் பாதுகாப்புத் துறை ஈடுபட்டுக்கொண்டுவருகின்றது. இது உண்மையிலேயே ஒரு சவால் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், சாதாரணமாக மனிதவாகன ஓட்டிகள் செலுத்தும் வாகனங்களிலேயே மக்கள் ஏறுவதற்குப் பயப்படுகின்ற ஒரு காலம் போய் இயந்திர மனிதர்களா? அப்பப்பா வேண்டாம் என்கின்ற நிலை மனிதர்களிடையே இருக்கின்றது. ஆனால், கார் ஓட்டப்பந்தயங்களில் இந்தவகையான கார்களைப் பயன்படுத்துவது ஒரு பரீட்சார்த்தமானதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. இதற்காக ஒரு மில்லியன் அமெரிக்கடொலர்கள் பரிசாக கொடுக்கப்படுகின்ற ஒரு போட்டியை ஒழுங்குபடுத்தும் திட்டமும் இருக்கின்றது. இதற்காக 21 அணிகள் இயந்திர மனித கார் ஓட்டிகளுடன் தயாராக இருக்கின்றன. ஆரம்பத்தில் இப்படியான போட்டிகள் ஒரு குறுகிய தூரத்தினை கடக்க்கூடியவாறு செய்யப்படவிருக்கின்றன. ஆனால், பின்பு கிட்டத்தட்ட 241 கி.மீ தொடக்கம் 338 கி.மீ வரையான தூரங்களை 10 மணித்தியாலத்தில் இப்படியான காரோட்டிகள் கடக்கக் கூடியவாறு வடிவாக்கப்படும் என ஆராய்ச்சியளர்கள் கருதுகின்றார்கள். இது 2006 ஆம் ஆண்டளவில் சாத்தியமாகும் எனக்கூறப்படுகின்றது.



2015 ஆம் ஆண்டளவில் உலகலாவியரீதியில், இயந்திர மனிதக் காரோட்டிகள் முற்று முழுதாகப் பாவனைக்கு வந்துவிடும்.

## திரை விமர்சனம்

# கம்பீரம்

சரத்குமாருடன் சேர்ந்து "அரசு" வெற்றிப்படத்தின்மூலம் இயக்குநராக அறிமுகமான சுரேஷ், மறுபடியும் சரத்குமாருடன் இணைந்து வெளியிட்ட படம் "கம்பீரம்". நேர்மையான, நியாயமான உதவிப் பொலிஸ் கமிஷனர் முத்துசாமி என்கின்ற சரத்குமார், பிரசவத்தின் போது, மனைவி சரோஜா இறந்துவிட அவள் (பிரணதி) நினைவில் மகள் கிருத்திகாவுடன் வாழகின்றார்.



அவருக்குக் கீழே கொன்ஸ்ட பிளாகப் பணிபுரியும் விஜய லட்சுமி (லைலா), தாய்ப்பாசம் கிடைக்காத சரத்குமாரின் மகள் கிருத்திகாவுடன் பாசம் காட்டுகிறார். இதற்கிடையே சரத்குமார் கள்ளச்சாராய வியாபாரியான நாகாவைக் கைதுசெய்து, அவனுக்குப் பின்னால் இருக்கும் 3 வி.ஐ.பிக்களின் எதிர்ப்புக்களைச் சம்பாதிக்கிறார்.



தொழிலதிபர் புண்ணியகோடி (சேதுவிநாயகம்), மத்தியமந்திரி ராஜேந்திரன் (தணிகலபரணி), ஐ.ஏ.எஸ் அதிகாரி மணிபாரதி (மாணிக்கவிநாயகம்) ஆகிய வி.ஐ.பிக்களை எப்படிச் சமாளிக்கிறார் என்பதுதான் மீதிக் கதை.

சரத்குமார் எதிரிகளுடன் முரட்டுத்தனம் மற்றும் மனைவி, மக்களுடன் மென்மை எனத் தனது நடிப்பைக் காட்டியிருக்கின்றார். லைலா பரிதாபத்திற்குரிய பெண்ணாக தனது நடிப்பைக்காட்டியிருக்கிறார். வில்லன்கள் செய்கின்ற கொடுமை மிக அதிகம். தந்தையுடைய வழியின் சரத்குமாரின் மகள் கிருத்திகா - பொலிஸ் அதிகாரியாக வருவது நல்லமுடிவு. மணிசர்மாவின் இசையில் பாடல்கள் ஏமாற்றிவிட்டன. முரளியுடைய ஒளிப்பதிவு நன்றாக இருக்கின்றது. சண்டைக்காட்சிகளில் கனல் கண்ணன் தூள் பறத்தியிருக்கிறார். அதிலும் ஜாஸ்பருடன் மோதும்போது சிறப்பான முறையில் சண்டை அமைக்கப்பட்டிருக்கிறது: வடிவேலு கொமெடி பரவாயில்லை. நீங்க வீட்டுக்குப் போகப் போறீங்க கவனம். சரத்குமார் மட்டுமே கம்பீரம்.

-PNS-

# மினுமினுக்கும் செயற்கை வண்ணாத்துப் பூச்சி



அமெரிக்க விஞ்ஞானிகள் மினுமினுப்புத் தன்மைகொண்ட வண்ணாத்துப் பூச்சிகளை உருவாக்கியுள்ளனர். வண்ணாத்து பூச்சியின் மரபணுத் தொகுதிக்குள் இரு புதிய மரபணுக்களை இணைத்துள்ளனர். இதன்மூலம், வண்ணாத்துப்பூச்சி மினுமினுக்கும் இயல்புகொண்ட வேறு உயிரினங்கள் போன்று செயற்பட ஆரம்பித்துள்ளன. இதுவரை வண்ணாத்துப் பூச்சியொன்றில் செட்டைகளில் எவ்வாறு நிறங்கள் தோன்றுகின்றன என்பதை விஞ்ஞானிகளினால் அறிந்துகொள்ள முடியாதிருந்தது. ஆபிரிக்க நாட்டில் காணப்படும் ஒருவகை வண்ணாத்துப்பூச்சிகளில் இவ்வகையான மரபணு மாற்றத்தினை உருவாக்கியிருந்தனர்.

இரவில் பச்சை நிறமாக ஒளிர்வதைக் கொண்டு, அவற்றின் இறக்கைகள் எவ்வாறு உருவாகியுள்ளன என்பதை அறிவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

ஜெலி பிஷ் (JELLY FISH) எனப்படும் கடல்வாழ் உயிரினமொன்றில் ஒளிர்வினை உருவாக்கக்கூடிய புரதத்தின் மரபணுவை வண்ணாத்துப்பூச்சிகளில் உருவாக்கியிருந்தனர்.

இதனிடையே பிரித்தானிய விஞ்ஞானியான 'மொன்ரிரோ' வண்ணாத்துப் பூச்சிகளில் எவ்வாறு மாறுபட்ட உருவ அமைப்புக்கள் தோன்றுகின்றன என்பதை ஆராய்ந்து வருவதாகவும், சில வகையான வண்ணாத்துப் பூச்சிகளின் செட்டையில் அடிப்பகுதியில் கண்கள்போன்ற உருவமைப்பு காணப்படுவதாகவும் இதனால், வண்ணாத்துப்பூச்சியின் செட்டையின் அடிப்பகுதியைப் பறவைகள் தாக்கும்போது, வண்ணாத்துப்பூச்சி தப்பித்துக்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

# தலையில் வழுக்கை போயே போச்சு

மனிதர்களுக்குரிய முக்கிய பிரச்சினை தலையில் வழுக்கை விழுவது. குறிப்பாக ஆண்களுக்கு இளவயதிலேயே வழுக்கை விழுவதால், அவர்கள் மிகவும் கவலை அடைகின்றார்கள். இதன் காரணமாக அவர்கள் உளரீதியான தாக்கத்துக்கும் உட்படுகின்றார்கள். வழுக்கைத் தலையிலே முடிவளரவைக்க உலகளாவிய ரீதியிலே பல்வேறுபட்ட சிகிச்சை முறைகள் வந்தாலும், ஒன்றுகூட சரியான முறையில் வெற்றியளிப்பதாகத் தெரியவில்லை. ஆனால், பென்சில் வேனியப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் - எலியின் முடிகளை எடுத்து மனிதனுடைய தலையில் நடலாம் என்கிறார்கள்.



இவ்வளவு காலமும் செயயப்பட்ட முடிநடுகை தோல்வியில் தான் முடிவடைந்திருந்தது. ஆனால், தற்போது எலிமுடிகளை நடுவதால் பல்வேறான நன்மைகள்கிடைக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். இவை உதிர்வது குறைவு. அத்துடன், மனித முடியம்சங்களுடன் ஒன்றிப் போகிறது. பக்கவிளைவுகள் இல்லை. மற்றும் செலவுகள் குறைவு. இந்தப் பழைய முறையாகிய அலோபீசியா முறை போன்றதுதான். ஆனால், அந்த முறையின் மூலம் கிடைக்கின்ற விளைவுகளிலும் இந்தமுறை மிகவும் நல்லமுறை எனக்கூறப்படுகிறது. எரிகாயங்கள்மூலம் ஏற்படுகின்ற முடியுதிர்வுகளுக்கும் இந்தமுறை சிறந்தது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

# டிஜிட்டல் வீடு

டிஜிட்டல் தொலைக்காட்சி, டிஜிட்டல் வானொலி, டிஜிட்டல் ஒலியமைப்பு என்று எல்லாம் தன்னித்தனியாக வாங்கவேண்டும். வீட்டையே டிஜிட்டலாக மாற்றிவிடுவோம் என தற்போது இங்கிலாந்து தொழில்நுட்பவியலாளர்கள் சிந்தித்து, அதற்கேற்றவாறு ஒரு டிஜிட்டல் வீட்டினை அமைத்திருக்கிறார்கள். முற்று முழுதாக வீட்டிலே காணப்படும் பொருட்கள் யாவும் டிஜிட்டல் ஒலியமைப்பைக் கொண்டதாகவும் அத்துடன், அந்த வீட்டிற்குள் சாதாரணமாகக் கதைக்கும் பொழுது கேட்கும் சத்தம்கூட டிஜிட்டல் ஒலியமைப்பாகக் கேட்கக் கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது.





இதுமுற்றுமுழுதாகக் கணினிமூலமே கட்டுப்படுத்தப்படுகின்றது. டிஜிட்டல் வீட்டுக்குள் காணப்படுகின்ற ஒளியமைப்புக்கூட, டிஜிட்டல் கலர் சிஸ்டமாகத்தான் இருக்கின்றது. இதன் மூலம் சுவரின் வர்ணங்களைக்கூட தேவைக்கேற்றவாறு மாற்றப்படக்கூடியவாறுள்ளன. இங்கே கதிர்த் தொழிற்பாடும் பயன்படுத்தப்படுவதானால், இது அவ்வளவாக நல்லதல்ல என்ற ஒரு கருத்தும் நிலவி வருகின்றது. மேற்குலக நாடுகளில் சத்தமில்லாமல் வீடுகள் எல்லாம் டிஜிட்டல் மாற்றத்துக்குள்ளாகிக் கொண்டுவருகின்றன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சுமாத்திரன் புலிகள்



இந்தோனேசியாவில் சுமாந்திரன் புலிகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இந்தவகை புலிகளின் உடற் பாகங்கள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுமாத்திராக் காடுகளில் இப்போது 400 முதல் 500 வரையான புலிகளே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவ தேவைக்காகவும், மாந்திரிகம், வசியம் போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்களின் தேவைக்காகவும் இந்தவகைப் புலிகள் கொல்லப்படுகின்றன. இயற்கை வளங்களை



பாதுகாக்கும் அமைப்புக்களில் இவற்றை பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தவகைப் புலிகளின் பற்கள் நகங்கள் (Clows) ஆகியவற்றிற்கு சந்தையில் அதிக மதிப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வருடமொன்றிக்கு 50 இற்கு மேற்பட்ட சுமாத்திரன் புலிகள் கொல்லப்பட்டுள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. உலகில் ஒரேயொரு பிரதேசத்தில் மாத்திரம் இந்தப் புலிகள் காணப்படுவதால், பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளாவிட்டால் அழிந்த இனமாகவே கருதப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாலி, சுமாத்திரா ஆகிய நாடுகளில் 1930, 1980 ஆகிய ஆண்டுகளில் சுற்றாடலில் மாத்திரம் காணப்பட்ட புலியினங்கள் பூமியிலிருந்து முற்றாகவே அழிக்கப்பட்டன. சில காடுகளில் காகித உற்பத்திக்காக மரங்கள் வெட்டப்பட்டபோது அங்கு வாழ்ந்த சுமாத்திரன் புலிகள் தமது வாழ்விடத்தை இழந்த தால் அழிந்து உள்ளன.

# அக்குபஞ்சர் சிகிச்சை

உடம்பின் நரம்புத் தொகுதியில் குறிப்பிட்ட பிரதேசங்களில், சிறிய செப்பு ஊசிகளைத் துளைத்து அவற்றின் ஊடாக சிறிதளவு மின்சாரத்தைச் செலுத்தி நோயைக் குணமாக்கும் மருத்துவக் கலையை அக்குபஞ்சர் (Acupancture) என அழைக்கப்படுகின்றது. இந்த முறையான வைத்தியம் சீனாவில் பாவிக்கப்படுகின்றது. தொடர்ந்து தலையிடியால் பாதிக்கப்பட்ட பலருக்கு இந்தவகையான சிகிச்சை முறை பலனளித்துள்ளது. குறிப்பாகப் பிரித்தானியாவில் தேசிய சுகாதார சேவை தனது சுகாதார சேவையில் அக்குப்பஞ்சர் முறையினால் சிகிச்சையளிக்க அனுமதி வழங்கியுள்ளது. தீராத தலைவலியால் பாதிக்கப்பட்ட பலருக்கு இந்தவகையான சிகிச்சைகள் வழங்கப்பட்ட பின், அவர்கள் குணமடைந்துள்ளதாகப் பிரித்தானியாவின் வைத்திய சஞ்சிகை தெரிவித்துள்ளது.



வழமையான மேற்கத்திய வைத்திய முறைகளை நிறுத்தி 'அக்குப்பஞ்சர்' முறையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர்களின் கணிப்பீடு மேற்கொண்டவேளையில் வருடத்தில் குறைவான நாட்களில் மாத்திரமே, தலைவலியால் பாதிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

மாற்று முறையிலான மருத்துவத்தில் (ALTERNATIVE MEDICINES) அக்குப்பஞ்சர் சிகிச்சை முறை தலைவலி, கழுத்துவலி, முதுகுவலி, முழங்கால் மூட்டுவலி ஆகியவற்றிற்கு இந்தமுறையிலான சிகிச்சை பலனளித்து வருவதாகவும் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

பிரித்தானியாவில் இந்தவகையான சிகிச்சையைப் பரவலாக அறிமுகப்படுத்துவதற்கும், நிதி வழங்குவதற்கும் அரசாங்கம் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

# அகாலமரணம்



இங்கிலாந்தில் ஒவ்வொரு ஆண்டும் 100 மில்லியன் பறவைகள் யன்னல் கண்ணாடியில் மோதி மரணமடைகின்றன. சில அழிந்துவரும் பறவை இனங்களும் இவ்வாறு மரணமடைகின்றன.

இந்தப் பறவையினங்களின் மரணத்தைக் குறைத்துக்கொள்வதற்குப் பறவைகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளும் விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால், இந்தப் பறவைகளை உணவாகக் கொள்ளும் வேறு பறவைகளினதும், விலங்குகளினதும் உருவப் படங்களை யன்னல்களில் ஒட்டுவதன்மூலம் அழிந்து வரும் பறவைகள் யன்னல்களுக்கு அருகில் செல்லவிடாது தவிர்த்துக்கொள்ளலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தவகையான பறவைகள் தோட்டக்கலையில் ஈடுபடுபவர்களுக்கு துணைபுரிகின்றன. இந்தப் பறவைகள் வண்டிகளுடன் மோதியும், பூனைகளிடம் சிக்கியும், கண்ணாடியில் மோதியும் மரணமடைகின்றன.

# யுபிட்டர் கிரகம்

யுபிட்டர் கிரகத்தில் மேற்பகுதி, பனிக்கட்டியினால் மூடப்பட்டுள்ளது. இதன் அடிப்பாகத்தில் நீர் காணப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கோளின்



மேற்பகுதியை துளையிடுவதற்கு கருவியொன்றை இந்தக் கிரக்தில் இறங்கவுள்ள கலத்துடன் பொருத்தப்பட வேண்டியிருந்தது கிரகத்தில் 10 தொடக்கம் 30 கி.மி ஆழத்தில் நீரும், நுண் அங்கிகளும் வாழ்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 225 சென்ரி மீற்றர் நீளம் கொண்ட குழாயின் நுனியில் செம்பினால் உருவாக்கப்பட்ட பகுதி காணப்படுகின்றது.

அதிக வெப்பநிலைக்கு உயர்த்துவதன்மூலம் பனிக்கட்டியை உருக்குவதற்குத் திட்டமிட்டுள்ளனர். இவை ஆரம்பத்தில் வட - தென் துருவங்களில் பனிப் பாறைக்குள் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டிருந்தன. இவற்றின் முனையை சூடேற்றுவதற்கு ரேடியோ கதிர் வீச்சைப் பிரயோகிக்கவுள்ளனர்.

# சுகப் பிரசவம்



குழந்தைகள் பழைய காலத்தில் மிகவும் சுகமாகப் பிறந்தன. இதனைச் சுகப்பிரசவம் என அழைத்தார்கள். இப்போது, பெரும்பாலான குழந்தைப் பிறப்புக்கள் சத்திர சிகிச்சை மூலமே பிறக்கின்றன. அத்துடன், அவற்றினுடைய தலையில் காயங்கள் ஏற்படுகின்றன. சாதாரணமாக இது வெளிக்காயங்களாக இருந்தாலும், இவற்றின் மூளையில் பாதிப்பு வரக்கூடிய வாய்ப்பு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். ஆரம்பத்தில் தலையில் காயங்களுடன் பிறக்கும் குழந்தைகள் நலமாகவே உள்ளன. ஆனால், ஒருவயது, இரண்டு வயது செல்லச்செல்ல அவற்றின் நடவடிக்கைகளில் மாற்றம் தெரிகின்றது. சில குழந்தைகளுக்கு தூண்டல், துலங்கல்களில் கூடப்பிரச்சினையிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். பெரும்பாலும் பெற்றோர்கள் இந்தக் காயங்களைப் பெரிதுபடுத்துவதில்லை. ஆனால், இவற்றினுடைய தாக்கம் தற்போது, பிள்ளை சுகமாகப் பிறந்தால் மட்டும் போதுமானதல்ல. மூளைப்பாதிப்பின்றியிருத்தல் வேண்டும் எனவும் பெற்றோர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

சிலவேளைகளில் தலைக்குள்ளே ஏற்படும் இரத்தக் கசிவினை வைத்தியர்கள் அவ்வாறாகக் கருதுவதில்லை. அது குருதிப் புற்றுநோய் போன்ற வியாதிகளைச் சிறுவயதிலேயே கொண்டுவருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆகவே, தலையிலேற்படும் காயங்கள் கவனிக்கப்பட வேண்டியவையே.

# பறவைக் காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள்

சீனாவிலே வந்த பறவைக்காய்ச்சலுக்குப் பலர் பலியாகியதுடன், கோழிகள் அழிக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததே. அது இப்போது, பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக சீன அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. சீனாவிலே இது கட்டுப்பாட்டுக்கு வந்தாலும், தாய்லாந்து மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளில் இந்தப் பறவைக்காய்ச்சல் வைரஸ்களின் தாக்கம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. சீனாவில் சார்ஸ் நோய் பரவி



கொஞ்ச நாட்களே முடிவுற்ற நிலையில் பறவைக்காய்ச்சல் வந்து மக்கள் பரிதவித்திருக்கின்றார்கள். இந்தப் பறவைக்காய்ச்சல் ஏற்கனவே, 1996 ஆம் ஆண்டு வந்து, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நோய்தான். இருந்தாலும், இந்த நோய் மீண்டும் எவ்வாறு பரவியது என்பதைப் பற்றி விஞ்ஞானிகள் கருத்துக்கூறும்பொழுது, இது காலநிலை மாற்றங்களால் பரவுகின்ற வைரஸ் என்றே கூறுகின்றார்கள். ஆரம்பத்தில் இந்தநோய்மூலம் விவசாயிகளே அதிக பாதிப்புக்குள்ளானார்கள். தாய்லாந்தில் அண்மையிற் கூட, சில பெண்கள் இறந்திருப்பதாகத் தெரிகின்றது. வியட்நாமிலும் சேர்த்து ஏறக்குறைய 23 பேர்வரை இறந்திருக்கின்றார்கள். இதற்கெல்லாம் ஒருமுடிவுதான் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட பறவைக் காய்ச்சலுக்குக் கெதிரான மருந்து.

# ஆசையூட்டும் கையடக்கத் தொலைபேசி



கையடக்கத் தொலைபேசிகள் மனிதனுடைய ஆர்வத்தினைத் தூண்டக்கூடியவாறு நாளாந்தம் சந்தைக்குப் புதிது புதிதான வடிவங்களில் வந்து கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக மனிதர்களுடைய எதிர்காலச் செலவு அதிகரித்துக் கொண்டே வருகின்றது. என்ன எல்லாம் ஒரு கையடக்கத் தொலைபேசியில் வைக்கவேண்டுமோ அவற்றை எல்லாம் புகுத்திவிட்டு எதிர்காலத்தில் எவற்றைப் புகுத்தலாம் எனத் தொழில்நுட்பவியலாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கையடக்கத் தொலைபேசியில் எடுக்கப்படும் அழைப்புக்களை விட அதில் காணப்படும் வேறு பயன்களுக்கே செலவு அதிகமாகின்றது என்கிறார்கள் பாவனையாளர்கள். ஆனால், விலை குறைந்த தொலைபேசிகளும் இருக்கின்றன. அவற்றில் வசதிகள் குறைவு. தற்போது அதியுன்னத செயற்பாடு ஒன்று கையடக்கத் தொலைபேசியில் காணப்படுகின்றது. அது எதுவெனின் அவற்றிலே காணப்படும் பிழைகள் அப்படியே திரையில் விழுகின்றன. இதன் காரணமாகத் தொலைபேசியில் பழுதடையும் தன்மை குறைவடைகின்றது. அவதானத்துடனான பாவனை அதிகரித்துள்ளது.

தேர்தல் களம் ... - ஆதி -

# தமிழ் மக்களின் ஒற்றுமையும் நெருங்கிவரும் வெற்றி இலக்கும்

குடாநாட்டு அரசியல் நிலவரங்கள் - புரட்சி, அதிர்ச்சி என்பவற்றுடன் எதிர்காலம் பற்றிய சந்தேகங்களுடனும் சூடு கண்டுள்ளது. தேர்தல் பற்றிய அறிவும், அனுபவமும் இல்லாத இளவட்டங்கள் ஜனநாயகத்தின் வாக்குரிமையினை அனுபவிக்க ஆவல் கொண்டுள்ளனர். வயது வந்தும் வாக்குரிமைக்கான பதிவுகள் இடம்பெறாமையால், எட்டிப்பார்க்கும் சமாதான காலத்திலும் அதனை அனுபவிக்க முடியவில்லை என்ற கவலையுடன், ஒரு பகுதியினர் உள்ளனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் பல தசாப்தங்களாகக் கண்டிராத தேர்தல் ஆர்வம் கொண்டுள்ளது. பிரசாரப்பணிகள் காலத்திற்கேற்வாறு பாரம்பரிய நவீன பாணிகளில் முன்னெடுக்கப்படுகின்றது. கிராமம், நகரம் என்று பாகுபாடின்றி சகல மூலைமுடக்குகளிலும் தூள்கிளம்பும் பிரசாரப்பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 10 அரசியல் கட்சிகளும், 2 சுயேட்சைக்குழுக்களும் தேர்தல் களத்தில் இறங்கினாலும் 2 அரசியல் கட்சிகளும், ஒரு சுயேட்சைக்குழுவுமே பிரசாரப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ஆகவே, யாழ். தேர்தல் மாவட்டத்திற்கான 9 ஆசனங்களும், இந்த 2 கடசிக்கும், ஒரு சுயேட்சைக்குழுவுக்குமே என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம். ஆகவே, இந்த மூன்றும் எவ்வாறு ஆசனங்களைக் கைப்பற்றப்போகிறது, அவை மேற்கொள்ளும் பரப்புரைகள், அவர்கள் முன்வைக்கும் கொள்கைப் பிரகடனங்கள், அவர்களின் இலக்கு என்பவற்றுடன் மக்கள் இதில் எதனை அதிகம் எதிர்பார்க்கிறார்கள், மக்களின் தெரிவு எதுவாக இருக்கும் என்பதனை அவதானிக்க முடிகிறது.

**சுயேட்சைக்குழு -1**

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றும், அவர்களுடனே இலங்கை அரசு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்றும்கூறி, புலிகளின் மறைமுக ஆதரவுடன் அதிக விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றம் சென்று பின்னர், முன்னுக்குப் பின் முரணாகப் பேசியும் அறிக்கை விட்டும் தமிழினத்திற்கு விரோதமான உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளுடன் அதிக நட்பைப் பேணிய ஒருவர் இதனால், புலிகளின் எதிர்ப்புக்கு உள்ளாகியவர், புலிகள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்ல நாங்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள்தான் என்றும் கூறினர். இவர் தலைமையிலான குழு தமிழ்மக்களின் வாழ்விடங்களுக்குள் பிரசாரம் செய்வதற்கு சிங்கள இராணுவத்துடனும், பொலிஸுடனும் வருகிறது. அது மட்டுமன்றி, இலங்கை ஜனாதிபதியின்விசேட பணிப்பில் விசேட படையணிகளின் பாதுகாப்பும் வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய நடவடிக்கைகள் யாழ். மக்களை மிகுந்த ஆத்திரப்படுத்தியுள்ளது.



தனியே பிரசுரங்களையும், பத்திரிகை விளம்பரங்களையுமே - இந்த சுயேட்சைக் குழுவினால் மேற்கொள்ள முடிகிறது. இது வரை ஒரு பொதுக்கூட்டமேனும் நடாத்தும் வகையில் மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. சலுகைகள் வழங்கப்படும் என்பதனையே இவர் கூறிவருகிறார்.

**வீணைச் சின்னத்தின் யாழ்.நிலை**

எதிரிக்கு எதிரி நண்பன் என்பதாக வீணைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு - இரண்டு கட்சிகளின் கூட்டே குதித்துள்ளது. கடந்த பல ஆண்டுக்ளாக யாழ்.குடாவின் அரசியலை சாதகமாக்கிக்கொண்ட கட்சி என்றே இதனைக் கூறவேண்டும். 12 வாக்குகளுடன் நாடாளுமன்றம் சென்று, புதிய வரலாறு யாழ்ப்பாணத்தில் எழுதப்பட்டது. சிங்கள அரசின் விருப்பிற்கேற்ப தமிழ் மக்களைக் கொன்றழிக்கவும் - கிருசாந்தி, சாரதாம்பாள் என்ற பட்டியல் ஒன்றை சிங்களக் காடைத்தனத்தால் உருவாக்கவும் வழி அமைத்தது. அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவை அவசியம் என்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கையை உயர்த்தி தமது சட்டைப்பைகளை நிறைத்துக் கொண்டவர்கள்.

உரிமைகளை விற்றுச் சலுகைகளை வரித்துக்கொண்டவர்கள். இன்றுவரை யாழ். குடாநாட்டில் பல அராஜகங்களின் சொந்தக்காரர்களான இவர்களின் நிலைமை சுதந்திரமான தேர்தலில் ஓரம் கட்டப்படும். புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், வேலைவாய்ப்பு என்றே மக்களை மாயை உலகுக்கு அழைத்து, அடிமை வலையில் மாட்டி விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதில் மக்கள் மிகத் தெளிவாக உள்ளனர்.

இராணுவ வாகனங்களிலேயே இவர்களின் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. எங்கெல்லாம் காவலரண் உண்டோ, அங்கெல்லாம் இவர்களது பதாகைகள் காணப்படுகின்றன. ஆகவே தான், சிங்களப்படைகளின் கையாட்கள் என்பதை வெளிப்படையாகக் காட்டிவருகின்றனர்.

**தமிழினத்தின் கூட்டு**

காலத்தால், கொள்கையில் பிரிந்து நின்ற பல கட்சிகள் மட்டுமன்றி, தனிநபர்களும் ஒரு தலைமை, ஒரு கொடி, ஒருதேசம், என்று தமிழர்களின் உரிமைக்கான கூட்டு மும்மரமாகத் தனது காலத்தின் கடமையில் ஈடுபட்டுள்ளது. தமிழ் மக்களின் சுதந்திரத்தையும், அதற்கான அர்ப்பணிப்பை - நசுக்கவும், கொச்சைப்படுத்தவும் நடைபெறும் சதிகளை எதிர்த்து, இந்தக் கூட்டு நிமிர்ந்து நிற்கிறது.

சலுகைகள் வேண்டாம், உரிமைகள் தான் வேண்டும். என்பதனை வலியுறுத்தி யாழ். குடாநாடே எழுச்சி கொண்டுள்ளது. தாயக விடுதலையில் பற்றுறுதி கொண்ட சகல தரப்பினரும் இதில் திரண்டுள்ளனர். சின்னச்சின்ன முரண்பாடுகள், தகராறுகளை மறந்து "எமது நிலம் எமக்கு வேண்டும்" என்ற கொள்கைப் பிரகடனத்தில் அணிதிரண்டுள்ளனர்.

சுடுகலன் கொண்டு எதிரியை விரட்டியடித்த புலிவீரர்கள் தமிழர்களின் கூட்டுக்கு வலுச்சேர்க்கின்றனர். பொங்குதமிழாக உலகை ஈழத்தமிழர்பால் கவர்ந்த கல்விச் சமூகம் திரண்டு நிற்கின்றது. பொது அமைப்புக்கள், கூட்டுறவுத்துறை என்று யாவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு வலுச் சேர்க்கின்றனர்.

தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரனது உருவப்படங்களுடன் மேடைகள் காட்சியளிக்கின்றன. உலகம் வியக்கும் வெற்றிகளைப் படைத்த தேசியத் தலைவரது சிந்தனையின்படியே - தேர்தல்கால நடவடிக்கைகள் நடைபெறுவதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வரலாறுகாணாத வெற்றியை அடைவது திண்ணமாகியுள்ளது.

இவ்வாறான நிலையில் கடந்த காலங்களில் மோசடியான தேர்தல் நடைபெற்று வந்துள்ளது என்ற குற்றச்சாட்டு பொதுவாகவே கூறப்பட்டு வருகின்றது. இந்த முறை மக்கள் தமது விழிப்புணர்வால் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் நிகழாமல் பாதுக்கவேண்டிய பொறுப்பில் உள்ளனர்.

தேர்தல் களம் ... - திரு.த.திரு -

# நடைபெற்ற தேர்தல்களும்... பெறப்பட்ட ஆசனங்களும்...

இலங்கை ஆட்சியாளர்களால் தமிழ் மக்களின் உரிமை மறுக்கப்பட்டது, முதல் தமிழ் மக்கள் தம் அரசியல் உரிமைகளுக்காக போராடத் தொடங்கியதுவரை, தமிழ் மக்கள் உரிமைகளுக்காகவே தேர்தல்களில் வாக்களித்துவந்தனர்.

1956 இல் சிங்களம் மட்டும் என்று சட்டம் கொண்டு வருவேன் என்று ஆட்சிபீடமேறிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா அதனை நடைமுறைப்படுத்தியபோது, தமிழரின் அகிம்சைப் போராட்டம் உரிமை மீட்புக்காக தந்தை செல்வா தலைமையில் ஆரம்பமானது.

அதனை அடக்க பண்டாரநாயக்கா தந்தை செல்வாவுடன் உடன்பாடு ஒன்றைச்செய்து பின்னர், அதனைக் கிழித்தெறிந்தார். அதன் பிறகு நடந்த முதல் தேர்தல் 1960 ஆகும்.

1960ல் நடந்தது இலங்கையின் 4 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தலாகும் இதில் தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சியை தமிழ் மக்கள் பெருமளவு ஆசனங்களுடன் வெற்றி பெறச்செய்தனர். இலங்கை நாடாளுமன்றில் 15 ஆசனங்களுடன் 3 ஆவது சக்தியாக தமிழரசுக் கட்சி விளங்கியது. உரிமைகளுக்காக தமிழ் மக்கள் வழங்கிய முதல் கருத்து வாக்கெடுப்பு அது. அதில் - 19 வேட்பாளர்களை தமிழரசுக்கட்சி நிறுத்தியது. அதில் 15 ஆசனங்கள் வெல்லப்பட்டன.

தமிழ் மக்கள் உரிமைகளுக்கு விரோதமாக இயங்கிய தமிழ்க்கட்சிகள் 1952 ஆம் ஆண்டு தேர்தலில் சிங்கள ஆட்சியாளர்களிடம் சோரம் போன தமிழ் கட்சி 4 ஆசனங்களை வென்றது. தமிழரச்கட்சி 2 ஆசனங்களைப் பெற்றது.

1960 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழரசு ஆசனம் 15 ஆகவும், தமிழ் விரோதக் கட்சி ஒரு ஆசனமாகவும் மாறின. இதன்மூலம் தமிழ்மக்கள் தம் உரிமைகளுக்கான கருத்து வாக்கெடுப்பை 1960 ஆம் ஆண்டு தேர்தலிலேயே வழங்கிவிட்டனர்.

இருந்தும், தமிழ் மக்களை சிங்களப்பேரினவாத ஆட்சியாளர்கள் ஏமாற்றியே வந்துள்ளனர். 1960 இல் 151 ஆக இருந்த இலங்கை நாடாளுமன்ற ஆசனங்களில், தமிழரசுக் கட்சி தனிக்கட்சியாக 15 ஆசனங்களை பெற்றது. இதில் ஐக்கிய தேசிய கட்சி 50 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 46 ஆசனங்களையும் பெற்றிருந்தன.

1960 இல் மீளவும் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் - தமிழரசுக் கட்சி ஆசனங்கள் 16 ஆக உயர்ந்தன. தமிழ் விரோத தமிழ்க் கட்சி ஒரு ஆசனத்தையே பெற்றது.

1970 ஆம் ஆண்டில் நடந்த 7 ஆம் நாடாளுமன்றத் தேர்தலில்- தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களைப் பெற்றது. வட்டுக்கோட்டை தீர்மானப்படி - தமிழீழத்துக்கான ஆணை என்றபேரில் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்ட 1977 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழீழத்துக்காக ஒன்றுதிரண்டு, வாக்களித்து, 19 ஆசனங்களை கூட்டணிக்கு தமிழ் மக்கள் கொடுத்தனர். தமிழீழத்துக்கான முதல் ஆணை இதன் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி திசை மாறிப்போகத் தொடங்கியது.

1977ற்கு முன் தந்தைசெல்வா இலங்கை நாடாளுமன்ற பதவியைத் துறந்து, 1975 ஆம் ஆண்டு காங்கேசன்துறை தொகுதியில் பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் வென்றார்.

1984 இலங்கை நாடாளுமன்ற தேர்தல் தமிழருக்கு முக்கியமாதானதாகவில்லை. காரணம் தாயக விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் பெருவெற்றிகளுடன் முனைப்புறத் தொடங்கி விட்டதாகும்.

1987 இல் இந்தியா - இலங்கை உடன்பாடு மூலம் இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, நிலைகொண்டு, தமிழ் தேசத்துரோக ஒட்டுண்ணிகளுடன் தமிழ்மக்களுக்கு கொடுமைகளை இழைத்து வந்தனர். இந்தக்காலப் பகுதியில் 1989 இல் அடுத்த தேர்தல்.

தமிழர்தாயக மாகாண சபையில் இருந்து கொண்டு தமிழ் மக்கள் தம் பக்கம் எனவும், இந்திய இராணுவத்தை வெளியேறவேண்டாம் என தமிழ் மக்கள் கோருகிறார்கள் என்றும், தமிழ் தேசத்துரோக ஒட்டுண்ணிகள் பரப்புரை செய்த காலம் அது. தமிழ் மக்களின் மனநிலை என்ன என்பதை கணிப்பிடத்தக்கதாக 1989 தேர்தல் அமைநதது.

ஈரோஸ் அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவேண்டும் என வலியுறுத்தி அந்தத் தேர்தலில் பங்கு பற்றியது. ஏனைய தமிழ்க் கட்சிகள், தமிழ் விரோதக்கட்சிகள் ஒரு கூட்டணியாக நின்றன. இந்திய இராணுவ அடக்குமுறையால் தமிழர் தாயகத்தில் நாளேடுகள் வர அனுமதிக்கப் படவில்லை. வரதராஜப்பெருமாள் அணி பொய்களையே மூலதனமாக கொண்டு, ஒரு பத்திரிகையை அச்சிட்டு, தமிழ் மக்களிடம் திணித்து வந்தது. ஏனைய நாளேடுகள் தடை செய்யப்பட்டிருந்தன.

ஈரோஸ் அமைப்பு பரப்புரை செய்ய - இந்தியப் படைகள் இடமளிக்கவில்லை. ஆனால், தமிழ் மக்களுக்கு ஈரோஸின் தேர்தல் நோக்கம் மட்டுமே தெரிந்திருந்தது.

இந்தச் சூழலில் இந்தியப்படைகள், தேசவிரோதிகளின் அட்டூழியங்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் வாக்குச்சீட்டில் கடைசியாக, தெளிவற்றதாக இருந்த வெளிச்ச வீட்டைத் தேடி வாக்களித்தனர். பரப்புரையே இல்லாமல் ஈரோஸ் இதில் 13 ஆசனங்களை வென்றது. தன் தேர்தல் நோக்கம் நிறைவேறாமல் போகவே, 13 ஆசனங்களையும் ஈரோஸ் துறந்து தன் அரசியல் நேர்மையை வெளிப்படுத்தியது.

இதன் பின் இலங்கை இராணுவ ஆக்கிரமிப்பு அதிகரிப்பால் தேர்தலில் தம் கருத்தை வெளியிட தமிழ் மக்களுக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. அந்தக் காலத்தில் தமிழ் தேச விரோதிகள் கள்ளவாக்கு மூலம் கோலோச்சினர். குறிப்பாக அரசபடைகளின் முதன்மை ஒட்டுண்ணியான ஈ.பி.டி.பி அரசபடைகளுடன், அவர்களின் துணையுடன் மக்களல்லாத பகுதிகளிலும் மக்களின் வாக்குகளை - கள்ளவாக்குகளாகப் போட்டு ஆசனங்களை வென்றனர். 1989 இன் பின் 1994 இல் இலங்கை நாடாளுமன்ற தேர்தல் நடந்தது.

1991ல் யாழ் தீவகம் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட போது 98 வீத மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்போது ஈ.பி.டி.பி யினர் தீவகத்தில் படையினருடன் நுழைந்தனர். ஒரு சில ஆயிரம் மக்கள் மட்டுமே அங்கே வாழ்ந்தனர்.

நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மக்கள் படை நடவடிக்கையில் தப்ப முடியாதபடி அகப்பட்டனர். ஆயினும், பின்னர் அங்கு கணிசமான மக்கள் படகுகள் மூலம் வெளியேறிவிட்டனர். இத்தேர்தலில் யாழ். தீவகத்தில் மக்களின் 27 ஆயிரத்து 744 கள்ள வாக்குகளை போட்டு, ஈ.பி.டி.பினர் யாழ்ப்பாணத்துக்குரிய 9 ஆசனங்களையும் எடுத்தனர். குறைந்த வாக்குகளில் ஆசனங்கள் வெல்லப்பட்ட வரலாற்றுச் சாதனை அதிகம் கள்ளவாக்குகள் மூலம் இது படைக்கப்பட்டது.

இதன்பின், 2000 இல் நடந்த தேர்தலில் யாழ்ப்பாண மக்களில் கணிசமானோர் வாக்களிக்க வாய்ப்பு எற்பட்டபோது, ஈ.பி.டி.பியால் 4 ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்தது. அதே 4 ஆசனங்களும் அதிகம் களளவாக்குகளில் பெறப்பட்டவையே. அதன் பிறகு, 2001 ஆம் ஆண்டு தேர்தலில் ஈ.பி.டி.பியின் மக்கள் ஆதரவு வெளிப்படத் தொடங்கியது.

2000 ஆம் ஆண்டு தேர்தலில் சந்திரிகா ஒரு அமைச்சினை வழங்கியபோது, யாழ்பபாணக் கோயில்களுக்குப் பணத்தினை வாரிஇறைத்தும், மக்களுக்கு அன்பளிப்புகளை அள்ளி வழங்கியபோதும், கள்ள வாக்குகளை போட்டபோதும் அவர்களுக்கு 2 ஆசனங்களே கிடைத்தன. இந்தத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்று, தேர்தலில் குதித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் 6 ஆசனங்களை வென்றது.

ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்டும் தமிழ்த் தேசியத்தையே பரப்புரை செய்த தி.மகேஸ்வரன் ஒரு ஆசனத்தைப் பெற்றார். ஆக தமிழ் மக்கள் சலுகைகள், பணங்கள், அன்பளிப்புக்களை நம்பி விடுதலைக்காக தம்மை அர்ப்பணிக்கவில்லை. விடுதலையே தமிழ் மக்களின் வாழ்வாக மாறிப்போனது.

தேசத்துரோகிகளையும், படை ஒட்டுண்ணிகளையும் தமிழ் மக்கள் ஆதரித்ததும் இல்லை, ஆதரிக்கப் போவதும் இல்லை இதை ஏப்ரல் 02 தேர்தல் நிரூபிக்கும்.

யாழ்ப்பாணம், தீவகத்தில் ஈ.பி.டி.பிக்கு இம்முறையும் வாக்குகள் கிடைக்கும் என்ற கனவே பலரிடம் உண்டு. 1994, 2000, 2001 ஆம் ஆண்டு தேர்தல்களில் அதிகம் கள்ள வாக்குகளை போட்டே தீவகத்தில் ஈ.பி.டி.பியினர் வெற்றிபெற்றனர்.

(தொடரும்....)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த*
*தன்மையான் ஆளப் படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பிரசாரங்கள், வதந்திகள், உண்மைகள்

தேர்தல் பிரசாரங்கள் இறுதிக் கட்டத்தை அடைந்து வரும் நேரம் வன்முறைகளும், ஜனநாயகவிரோத நடவடிக்கைகளும் மட்டுமல்ல மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் வகையிலான வதந்திகளும் கூட அதிகரித்து வருவதை அன்றாட நிகழ்வுகள் மூலம் உணரக்கூடியதாக உள்ளது.

பல விதமான கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் ஓரிரு இடத்தையாவது ஏதோ ஒரு வழியைப்பயன்படுத்திப் பெற்றுவிட வேண்டும் என்ற முனைப்பில் குயுக்தியானதும் , நேர்மையற்றதுமான வழிமுறைகளைக் கையாளத்தொடங்கியுள்ளதாக பொதுமக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுவதுடன், கடுமையாக விமர்சிக்கப்பட்டும் வருகிறது.

கொள்கை மற்றும் இலட்சியத்தின் மீதான பற்றுறுதி செயற்திறன் ஆகியவற்றை மக்கள் முன்வைத்து மக்களின் நம்பிக்கையை, தமது கடந்தகால மக்களுக்கான பணிகளின் மூலம் வென்றெடுத்து அதன் மூலம் கிடைக்கும் ஆதரவுப் பலத்தில் தேர்தலில் வெற்றி பெறுவது தான் நியாயம் அதுவே ஜனநாயக தர்மம்.

ஆனால், அண்மைக்காலத் தேர்தல் பிரசார உத்திகளும் வாக்குச் சேகரிப்புக்கு கையாளும் உபாயங்களும் மக்களை ஏமாளிகளாக நினைத்துக் கொண்டு, எப்படியாவது எதைச் சொல்லியாவது எதனைக் கொடுத்தாவது வாக்குகளை வாரிக்கொள்ளலாம் என்ற மூலோபாயத்தையே அரசியல் ரீதியில் மக்களை வென்றெடுக்கத் திராணியற்ற வேட்பாளர்கள் கையாண்டு வருகின்றனர் என்பதை வெளிப்படையாகவே எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

பிரசாரம் என்பது - கொள்கை விளக்கத்தின் அடிப்படையில் மக்களை அரசியல்ரீதியில் சிந்திக்கவைப்பதாகவும் அதன் அடிப்படையில் அவர்கள் தங்கள் வாக்குகளை தாமாகவே அளிக்க முன்வரவைக்கும் ஒரு கலையே ஆகும்.

பிரசாரம், பொய்கள் வசமும், வதந்தி பரப்புவோர் கைகளிலும் கொள்கைத் தெளிவற்றோர் பொறுப்பிலும் வழங்கப்பட்டால், பொது மக்களைக் குழப்புவதைத் தவிர அவர்களால் ஜனநாயக வழியில் அரசியல் ரீதியில் எதனையும் மக்களுக்கு உணர்த்திவிட முடியாது.

தென்னிலங்கை அரசியலில் இது ஒரு பாரம்பரியமாகி விட்ட நிலையில், அங்கு கட்சி அரசியல் என்பது பிரசார ரீதியிலும் சரி, ஏனைய அணுகு முறைகளிலும் சரி வன்முறைக்கே முக்கியத்துவம் அளித்துவருதாகத் தெரிகிறது.

தொடர்பூடகங்களில் வரும் செய்திகள், வன்முறைகள் கோஷ்டி மோதல்கள் நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்கள் போன்றவற்றின் ஆக்கிரமிப்பை ஆதாரப்படுத்துவதை உணர முடிகிறது.

அதனை ஒருபுறம் வைத்துவிட்டு வடக்கு - கிழக்கு பகுதிகளில் பிரசார நடவடிக்கைகளைப் பற்றி நோக்குவோம்.

இங்கு சொல்லப்படும் விடயங்கள் பக்கச்சார்புடன் கூறப்படுவதாக எவரும் கருதவேண்டியதில்லை. இவை மக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலேயே எழுதப்படுகின்றது.

வடக்கிலும்,கிழக்கிலும் கடந்த இரு தசாப்தங்களுக்குப் பின்னர் இப்போதுதான் சகல மக்களும் வாக்குகளை அளிப்பதற்கான வாய்ப்பும் சூழலும் ஏற்பட்டுள்ள நிலையில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றார்கள் என்தைத் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அதுவும், நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை முழுதாக இழந்த மக்களைபெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு-கிழக்கில் இலங்கையில் சிங்கள ஆட்சியே நிலவும் சூழ்நிலை தொடரப்படுகின்றபோதிலும் ஒரு கொள்கைக்காக மக்கள் ஒன்றுபட்டு நின்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தியை தென்பகுதிச் சிங்கள மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் உரத்துக் கூறி உறுதிப்படுத்தவே இந்தத் தேர்தலை பயன்படுத்தப் போகிறார்கள் என்பது தெளிவான ஒன்றேயாகும்.

இந்த நிலையில், இந்தக் கொள்கையை மட்டுமே முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகின்றது. தமிழ்த் தேசியத்தின் உறுதியையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்துவதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒரே நோக்கம். எனவே, இவர்களின் பிரசாரம் பேசுபொருளில் தேர்தல் காலத்திற்கேயான வரண்ட வாக்குறுதிகள் எதுவும் இல்லை.

தமிழ்மக்களின் தாகம் எதுவோ அதுவே பேசுபொரு ளின் ஆதார மூலம் கொள்கையில் உறுதிகொண்ட மண்ணுக்காகவும்,மக்களுககாகவும் அளப்பரிய அர்ப்பணிப்புக்களைச் செய்து தமிழினம் தலை நிமிர்ந்து வாழவைத்த விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் மக்களின் ஆணையை வேண்டிநிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பிரசாரம் தமிழ்த்தேசியத்தின் ஒருமைப்பாட்டின் குரலாகவே ஒலிப்பதால் அதனை மக்கள் இயல்பாகவே புரிந்துகொண்டு செயற்பட வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது.

இதேவேளை, மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என ஆரம்பகாலம் முதல் கோஷம் போட்டுவரும் ஈ.பி.டி.பியினர் அந்தக் காலம் முதல் இன்றுவரை அவர்களின் அடிப்படைக்கொள்கையை முற்று முழுதாக நிராகரிக்கும் சிங்களத் தலைமைகளுடனும், சிங்கள படைகளுடனும் இணைந்து அவர்களின் பராமரிப்பிலும், பாதுகாப்பாலும் இயங்கியபடியே தமிழ்மக்களின், தமிழர் தாயகத்தின் உரிமை, மற்றும் தனித்துவம் பற்றிப்பேசுவதை தமிழ் மக்கள் வியப்புடன் நோக்கவே செய்கின்றனர். தங்களால் செய்யமுடியாத ஒன்றை வாக்குறுதியாக வழங்குவது தங்களை ஏமாற்றும் பிரசார உத்தியென்றே அவர்கள் உணர்கின்றனர்.

இதேவேளை, ஒரு சுயேட்சைக் குழு - தந்தை செல்வநாயகத்தை ஒருகாலத்தில் மிகமோசமாக விமர்சித்து அவமதித்த ஒருவரை தலைமையாகக் கொண்டதுடன், அவரைத் தந்தையின் வாரிசாகவும் இனம் காட்டிடமுயன்றுள்ளது. தந்தையின் தமிழ் தேசியக்கனவை சிதைக்கும் தன்மைகொண்ட, கொள்கைகள் ஏதுமற்ற இந்தக்குழு தந்தையின் பெயரைப்பயன்படுத்தி வாக்குக்கேட்டதை உணர்வுள்ள தமிழ்மக்கள் பரிதாபமாக பார்க்கிறார்கள்.

மற்றொரு பிக்குகள் கட்சி வேட்பாளர் நியமனப்படுத்திரம் தாக்கல் செய்துடன் சரி... பிக்குகளுக்கென்ன அரசியல் கொள்கை என்று நினைத்து விட்டார்களோ?

ஏனைய பேட்டியிடும் குழுக்கள் அனைத்திற்கும் பிரதான நோக்கம் தமிழ்மக்களின் வாக்கு வங்கியைச் சிதைத்து பிரிப்பதேயாகும். இதில் வேறு கருத்துக்கு இடமேயில்லை. உண்மையில் தமிழ்மக்களின் உரிமை, சுதந்திரம், எதிர்காலம் ஆகியவற்றில் இவர்களுக்கு ஆத்மார்த்த விருப்பம், இருக்குமெனில் (பிக்குகள் தவிர) ஏனை அனைத்துக் கட்சிகளும், குழுக்களும் முரண்பாடுகளுக்கப்பால் ஒருமைப்பட்டு நின்று விட்டுக் கொடுப்புகளைச் செய்து உண்மையானதும் வலுவானதுமான தமிழர் ஒருமைப்பாட்டையும் தமிழ்த் தேசியத்தின் உறுதியையும் வெளிப்படுத்த உதவியிருக்க முடியும்.

அப்படிச் செய்திருந்தால் வரலாறு அவர்களை கௌரவமாகப் பதிவு செய்து கொண்டுமிருக்கும். ஆனால், அப்படி அவர்கள் செய்ய அவர்களின் சுயநலமும், பதவி ஆசையும் விடவில்லை.

அவர்களை ஆட்டிப்படைக்கும் பேரினவாத - அந்நிய சக்திகளும் அவர்களை அனுமதிக்கவுமில்லை. ஆனால், சகல பிரசாரங்களுக்கும், வதந்திகளுக்கும் அப்பால் தமிழ்மக்கள் உண்மையைப் புரிந்து கொண்டு தமது வரலாற்றுப் பொறுப்பை நிறைவேற்றவேண்டும். அதுவே உலகத்தமிழினத்தின் எதிர்பார்ப்புமாகும்.

# நாடும் நடப்பும்




# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் பெண்களுக்கு உரிய இடம் வழங்கவில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்களுக்கு எந்தவொரு இடமும் வழங்கப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில-

ஜனாதிபதியும், ஜே.வி.பியும் பெண்களுக்கு எந்தவொரு தனியிடத்தையும் வழங்கவில்லை.

இதனை அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணக் கூடியதாக உள்ளது. ஒரே ஒரு இடத்தில் மட்டும் பெண்கள் பற்றி ஒரு பந்தியில் கூறப்பட்டுள்ளது.

அதுவும் 58 பக்கம் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்வாறு ஓரிடத்தில் மட்டும் கூறப்பட்டிருப்பது பெண்கள் விடயத்தில் அவர்கள் கொண்டிருக்கும் அசண்டையீனத்தையே காட்டுகிறது.

நிர்வாகம், தேசியப் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை முதலான விடயங்களில் மட்டுமே பெண்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

இவற்றால் பெண்களுக்கு நன்மையெதுவும் கிடைக்க முடியாது. அதேவேளை தேசியப் பாதுகாப்புடனா அல்லது வெளிநாட்டுக் கொள்கைகளுடனா பெண்கள் தொடர்புபட்டுள்ளனர் என கேட்க விரும்புகிறேன். ஏனெனில் இவற்றால் பெண்கள், சிறுவர்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக்குமா என்பது ஐயப்பாடாகவே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் சட்டவிதிகள் இம்முறை கடுமையாக அமுல்படுத்தப்படும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன் தொலைக்காட்சி, வானொலி முதலான இலத்திரனியல் ஊடகங்களில் தேர்தல் விளம்பரங்களை வெளியிடுவதற்கு உள்ள தடையும், 48 மணித்தியாலங்களில் பத்திரிகைகளில் தேர்தல் விளம்பரங்களை வெளியிடுவதற்கான தடையும் இம்முறை கடுமையாக அமுல்படுத்தப்படுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அச்சு ஊடகங்கள் 48 மணித்தியாலங்களுக்கு முன்புவரை கட்சிகளின் கடைசி நேரப் பிரசாரக் கூட்டங்கள் தொடர்பான செய்திகளைப் பிரசுரிக்கமுடியும். எனினும் 72 மணித்தியாலங்களுக்கு முன்பே தேர்தல் பிரசாரங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் சட்டத்திலுள்ள இவ்விதிகள் முன்னைய தேர்தல்களின் போது கடுமையாக அமுல்படுத்தப்படவில்லை. ஆனால் இம்முறை, இவ்விதிகள் கண்டிப்பாக அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, பொலிஸ் மா அதிபருக்கு நான் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளேன் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல்விதிகள், ஊடகங்களின் நடுநிலைமை குறித்துக் கலந்துரையாடலொன்றுக்கு ஊடக நிறுவன அதிபர்களைத் தேர்தல் ஆணையாளர் அழைக்கத் தீர்மானித்துள்ளார். அரசியல் கட்சிகளின் செயலாளர்களின் கோரிக்கையை தொடர்ந்து இத்தீர்மானத்தை அவர் மேற்கொண்டுள்ளார். இந்தச் சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

# சமாதான முயற்சிகள் தொடர்பாக ஐக்கிய முன்னணியின் திட்டங்களை விடுதலை புலிகள் நிராகரித்து விட்டனர்!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன் வைத்துள்ள சகல யோசனைகளையும் - விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்த்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெலிமட-தியத்தலாவ பகுதிகளில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பல தரப்பட்ட செயற்பாடுகளை முன்வைத்தன. எனினும் அவை பலனளிக்கவில்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி யுத்தத்தை நிறுத்திச் சமாதான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தாலேயே முடிந்தது.

திட்டமிட்ட முறையில் செயற்பட்டதன் காரணமாக இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிகளை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டு ரோக்கியோவில் வைத்து நிதியுதவி வழங்க உடன்பட்டன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# அரசியல் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் புலிகள் மீது பழி சுமத்த முயற்சி

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய ஆகியோருக்கு கடும் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது எனவும் இவர்களுக்குத் தீங்கிழைத்துவிட்டு அதற்கான பழியை விடுதலைப் புலிகளின் மீது சுமத்துவதற்கு சில குழுக்கள் முயற்சிக்கின்றன எனவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாக செய்தியொன்று வெளியாகியுள்ளது. தற்போதைய தேர்தல் பிரசார காலத்தில் இவ்விரு முக்கிய தலைவர்களையும் தாக்குவதற்கு சில குழுக்கள் முயற்சிக்கின்றன என நம்பத்தகுந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

புலிகள் இயக்கத்தின் ஒரு பிரிவினர் மீது இதற்கான பழியைச் சுமத்திவிடுவதற்கு மேற்படி குழுக்கள் முற்படுகின்றன என பொலிஸார் அஞ்சுகின்றனர் என புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் கூறினாரென இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஜனாபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கான பாதுகாப்பும் தேர்தல் காலத்தில் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதென பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கான மேலதிக பாதுகாப்பு ஏற்பாட்டு விபரங்களை வெளியிடுவதற்கு பொலிஸ் மா அதிபர் மறுத்துள்ளார். மேலதிக பாதுகாப்பு ஏற்பாட்டுக்கான காரணம் குறித்தும் அவர் எதுவும் கூறவில்லை. எனினும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உள்வீட்டுப் பிரச்சினைகளே இத்தீர்மானத்திற்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# தமிழ் மக்களின் ஒற்றுமையை தேர்தலில் வெளிப்படுத்துவோம்


சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களின் உரிமையை வழங்கும்படி சர்வதேசம் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமாயின், நாம் தேர்தல் மூலமாக சர்வதேச சமூகத்துக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். இந்த அழுத்தத்தைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவே கொடுக்க முடியும். இதனைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டு தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தேர்தலிலே சிங்களக் கட்சிகள் எவையும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமாட்டாது. எனவே, யார் ஆட்சி அமைக்கப் போகிறார்கள் என்பதைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே நிர்ணயிக்கப் போகிறது. அதன்மூலமாக எமது பேரம்பேசும் ஆற்றல் வளரப்போகின்றது.

தமிழ் மக்கள் எல்லோரும் யுத்தத்தை வெறுக்கின்றார்கள். ஏனெனில், இந்த யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களே. நாம் பல்லாயிரக்கணக்கான போராளிகளையும், பொது மக்களையும் யுத்தத்தின் பால் இழந்திருக்கிறோம். எமது சொந்த வீடுகளை இழந்திருக்கிறோம். இன்றும் அகதி முகாம்களிலே அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எனவே தான் தமிழர்களாகிய நாம் யுத்தத்தை வெறுக்கின்றோம்.

இன்று தமிழர் தாயகப் பிரதேசத்திலே பல அபிவிருத்திப் பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், அதனை மேற்கொள்வதற்கு எம்மிடம் சட்டரீதியானதொரு அமைப்பு இல்லை. வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென சர்வதேசம் பல கோடி ரூபாய்களை வழங்கத் தயாராகவுள்ளது.

எனவே, அந்தப் பணத்தை எமது தமிழர் தாயகத்தின் அபிவிருத்திக்காகச் செலவிட விடுதலைப் புலிகளிடம் சட்டபூர்வமான இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கையளிக்க வேண்டுமென நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

எமக்கென்று தாயக மண் உண்டு. எமக்குத் தனியான மொழி, கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் உண்டு. தனியான பொருளாதார பலம் உண்டு. எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் சக்தியுமுண்டு. எனவே, அரசு கௌரவமான ஒரு தீர்வுக்கு வர மறுத்தால், எமது தலைவிதியை நாமே நிர்ணயிப்போம். இதுவே சுயநிர்ணய உரிமை. இந்தச் செய்தியை நாம் சர்வதேச சமூகத்திற்கு இந்தத் தேர்தல் மூலமாக தெளிவாகச் சொல்லுவோம்.

தமிழ்த்தேசிய இனத்தின் ஒற்றுமையைச் சிதைக்கப் பலர் முயல்கின்றார்கள். ஆனந்தசங்கரியாரோ கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு, படாதபாடு படுகிறார். கிழக்கிலே கருணா பிராந்தியவாதத்தைத் தூண்டிவிட்டுள்ளார். இதனை யாரும் ஏற்கமுடியாது.

வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேசம். தமிழர் தாயகம். அதன் தலைநகரம் திருகோணமலை. எனவே, வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவே வாழ விரும்புகின்றோம்.

இந்த உண்மையைக் கருணாவிற்கு மட்டுமல்ல, அவருக்குப் பின்னாலுள்ள சக்திகளுக்கும் எடுத்துச் சொல்வதற்குத் தேர்தலை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவோம்.

# விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை நிர்ணயிப்போம்


சிவமகாராசா

தமிழ் மக்களை அழித்துத்தான் சமாதானத்தைக் கொண்டுவர முடியும் என்ற எண்ணம் சந்திரிகாவிடம் உண்டு. இதனையே அவர் யுத்தத்தின் மூலம் சமாதானம் என அடிக்கடி கூறிவருகின்றார். இத்தகைய சந்திரிகாவோடு எமது தமிழ் அரசியல்வாதிகள் சிலர் சேர்ந்து நிற்பது வேதனையான விடயம்.

அவர்களது இந்த துரோகத்தனமான செயலை மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பொதுத்தேர்தலில் மக்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டும். கடந்த ஐம்பது வருடங்களாக தமிழ் மக்கள் நடாத்திவந்த விடுதலைப் போராட்டத்தை அதன் வெற்றியின் மறுவடிவத்தை இந்தத் தேர்தல்தான் நிரூபிக்கப்போகிறது. அதனாலேயே கடந்தகால தேர்தல்களைவிட இந்தத் தேர்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தை இடையிலே முறிந்ததும், விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவருவதற்காக ரணில் சில திட்டங்களை முன்வைத்தார். இதிலே தமிழ் மக்களுடைய உரிமை சரியான முறையிலே வழங்கப்படாமையால் புலிகள் அதை நிராகரித்தனர்.

பின் புலிகள் சர்வதேச சட்ட நிபுணர்களோடு ஆராய்ந்து ஒரு வரைபைக் கையளித்துள்ளனர். இதனைச் சர்வதேச சமூகம் ஏற்றுள்ளது. இதனை மேலும் வலுப்படுத்த நாம் அனைவரும் எமது வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே இடவேண்டும்.

இன்று ஆனந்தசங்கரி சுயேட்சையாக நின்று போட்டியிடுகிறார். ஆனால் அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் காரியாலயத்தை தனது தேவைகளுக்காக பயன்படுத்துகிறார். தந்தை செல்வாவின் கொள்கை, இலட்சியம் என்பவற்றிற்கு மாறாக நடந்துகொண்டு, அவருடைய கட்சி காரியாலயத்தை தனது தேவைக்குப் பயன்படுத்துவது தவறான விடயம். சுயேட்சையாகப் போட்டியிடும் சங்கரி தனக்கென புதிய அலுவலகத்தை திறந்திருக்கவேண்டும். அதுதான் நல்ல அரசில் வாதிக்கு அழகு.

# தேர்தல் களம் - 2004




**அளவெட்டி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகள் கலாசார நிலையத்தில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலே உரையாற்றிய கூட்டமைப்பு வேட்பாளர்கள் மற்றும் பிரமுகர்களின் உரைகளிலிருந்து சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றது.**

**இந்தக் கூட்டத்திலே தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தினரின் 'இத்தால் சகலரும் அறிக...' எனும் அரசயல் விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.**

# தமிழ்த் தேசியத் தலைமையின் வெற்றிக்கு குரல்கொடுப்போம்


ரவிராஜ்

நாம் இந்தமுறைத் தேர்தலில் வாக்குறுதிகளை அள்ளி வழங்கி, வாக்குகளை கேட்கவில்லை. தமிழ் தேசியத்திற்காக, அதன் ஒற்றுமைக்காகக் குரல்கொடுப்போம் என்ற வாக் குறுதியை மட்டுமே என்னால் வழங்கமுடியும்.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டமெனவும், அவர்களைப் பயங்கரவாதிகள் எனவும் சர்வதேச சமூகத்தின் முன் சந்திரிகா காட்டினார். அதனால் சில நாடுகளும் அவர்கள் மீது தடைவிதித்தன.

உண்மையாகவே விடுதலைப் புலிகள் மீது ஆயுதப்போராட்டம் திணிக்கப்பட்டதே தவிர, அவர்களாக அதை விரும்பவில்லை. எனவே இந்தச் செய்தியை உலகம் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். இராணுவ பலம் மிக்க விடுதலைப் புலிகளை- அரசியற் பலத்திலும் நாம் வெற்றி பெறச் செய்யவேண்டும்.

இன்று டக்ளஸ் தேவானந்தா - தமிழினத்தையே கூறுபோட்டு விற்கிறார். விற்ற இலாபத்தை வைத்து அவர் வீணையை வாசித்து கொண்டிருக்கிறார். தற்போது மீண்டும் உங்கள் வாக்குகளை கேட்டு வந்துள்ளார். இந்தத் தேர்தலிலே தமிழ் மக்கள் அனைவரும் தமக்கான பங்களிப்பை நல்கி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடைய வெற்றியை உறுதி செய்யவேண்டும்.

# உரிமைகளை வெளிப்படுத்த அனைவரும் முன்வரவேண்டும்


பத்மினி சிதம்பரநாதன்

கடந்த கால தேர்தல்கள் பற்றி எம்மிடம் பல கசப்பான உணர்வுகள் இருந்தது. ஆனால், இன்று நாமே தோதலில் குதித்துள்ளோம் என்றால், அதற்கு ஒரு வலுவான காரணம் உண்டு.

அதாவது, வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டு, வெவ்வேறு அணியாகப் பிரிந்து நின்றவர்கள் எல்லாம் - இன்று ஒரே கொள்கையின் கீழ் ஒரே அணியிலே திரண்டுள்ளார்கள். அதுதான் இந்தத் தேர்தல் முக்கியமானது என்பதற்குக் காரணமாகும்.

நாம் அனைவரும் இன்று ஒரே தேசியத் தலைமையின் கீழே திரண்டுளளோம். 20 வருடமாக பயத்தினுள் வாழ்ந்து, எதையுமே பேசப்பயந்த நாம் - இன்று பேசத்தொடங்கிவிட்டோம். அன்று எமது மௌனத்தை சாதகமாகப் பயன்படுத்திய சிங்கள அரசுகள் - சர்வதேச நிதியுதவியைப் பெற்று, எமது தலையின்மேலே குண்டுகளைப் போட்டனர்.

இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் - தேர்தலில் நிற்கிறோம் என்பதைவிட, ஒரு பொறுப்பைக் கையில் எடுத்துள்ளோம் என்பதே பொருத்தமானது.

போரினால் எமது சமூகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகப் பெண்கள், சிறுவர்கள் அதிக பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். பல பெண்கள் தமது மன உணர்வுகளை வெளியே சொல்லமுடியாது நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்கள் எல்லாம் தமது உணர்வுகளை வெளிப்படுத்த முன்வரவேண்டும். அதற்காகவே அரசியலிலேயும் பெண் பிரதிநிதித்துவம் தேவை என்பதற்காகவே நான் இன்று தேர்தலிலே போட்டியிடுகிறேன்.

(94)

# தமிழர்களின் அபிலாசையை வெளிப்படுத்தும் தேர்தல்

**பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன்**

யார் யார் நாடாளுமன்றம் செல்கிறார்கள் என்பதைவிட, யார் யார் செல்லக்கூடாது என்பதே இந்த முறைத் தேர்தலில் முக்கியமானது ஆகும்.

செம்மணிப் புதைகுழியிலே எமது உறவுகள் 600 பேர் கொன்று புதைக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த டக்ளஸ் - பல சலுகைகளை வழங்கி, எமது மக்களை திசை திருப்பப் பார்க்கிறார். எனவே நீங்கள் அனைவரும் தெளிவோடும், அவதானத்தோடும் அவர்களை நிராகரிக்க வேண்டும்.

ஒரே தலைவனின் கீழ் அணிவகுத்து நிற்கின்றோம் என்ற செய்தியை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் ஒட்டுமொத்தமான அபிலாசையை உலகிற்கு எடுத்துக்காட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடைய அதிகாரத்தோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தேர்தல் களத்திலே குதித்துள்ளது.

நாம் போடும் வாக்குப் பலம் மூலம் ஜனநாயகரீதியில் புலிகளின் பலத்தை பெருக்கிக் கொள்ளமுடியும்.

நீங்கள் ஒவ்வொருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இடும் வாக்கு, எமது மக்களை சுபீட்சமான வாழ்வுக்கு இட்டுச்செல்லும்.

பொங்குதமிழிலே நிங்கள் அனைவரும் திரண்டு வந்து வெளிப்படுத்திய ஆதரவையும், உணர்வையும் வாக்குச் சீட்டிலே காட்டவேண்டும். அதன் மூலமாக பல செய்திகளை சர்வதேச சமூகத்திற்கு சொல்ல முடியும்

(94)

# தவறிழைத்தவர்களை தண்டிப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் இதுவாகும்

**பண்டிதர் க.நாகலிங்கம்**

இந்த முறைத் தேர்தலை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, புலிகளின் கைகளை மேலும் பலப்படுத்த நாம் தவறுவோமாயிருந்தால், மீண்டும் நாம் ஏமாந்த கோணகிரிகளாகவே இருப்போம். இந்தத் தவறு ஏற்பட நீங்கள் யாரும் காரணமாக இருந்து விடக்கூடாது.

இன்று ஆனந்தசங்கரி தனியாகப் பிரிந்து நிற்கிறார். அவரைப்பற்றி எனக்கு நிறையவே தெரியும். அவர் அரசியலிலே பல தில்லுமுல்லுகளைச் செய்தவர். கிளிநொச்சியிலே பல தோல்விகளைச் சந்தித்து பின் தமிழ் காங்கிரஸ் மூலமாக நாடாளுமன்ற ஊறுப்பினரானவர்.

பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்று உருவாகிறது என்றவுடன் அதற்குள் தாவிக்கொண்டார். அவரைக் கூட்டணியில் சேர்த்துக் கொண்டது தவறென்று நான் சொல்லவில்லை. அது அவரது ஜனநாயக உரிமையே. ஆனால், அவரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியில் அமரவைத்தது தான் எமது தமிழரசுக்கட்சி செய்த தவறு.

இன்று அவர் கூட்டணியைப் பூட்டிவிட்டு திறப்பைக் கொண்டு திரிகிறார். ஆனந்தசங்கரி - 1970 ஆம் ஆண்டுத் தேர்தலிலேயே வென்று, சிறிமாவோ பண்டாரநாயக்காவால் கொண்டுவரப்பட்ட அரசியல் சாசனத்தை ஆதரித்தவர். இதுவே தமிழ்மக்களின் அடிமைச்சாசனமாகும். அதனை ஆதரித்து, அதற்கு தமிழ் மக்களின் ஆதரவு உண்டெனக் காட்டி வரலாற்றுத் தவறை செய்தார்.

தற்போது அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது, அதனைப்பறித்து கிழித்ததோடு, நீதிமன்றம்வரை சென்று தமிழர் விடுதலைக்கூட்டணியை தானும் பயன்படுத்த முடியாமல் மற்றவர்களும் பயன்படுத்த முடியாமல் செய்துள்ளார்.

அவர் அடிக்கடி சொல்கிறார் கடந்த தேர்தலிலே தான் 35,000 விருப்புவாக்குகளை பெற்றதாகவும், எனவே அந்த 35,000 பேரையும் கைவிடமுடியாது எனவும், இது என்னவோ இந்த முறை தேர்தலிலே அந்த 35,000 பேரும் அவரை கைவிட்டு விடுவார்கள் என்பதுதான் உண்மை.

சங்கரி -தேர்தலிலே போட்டியிடாவிட்டால் மானம், மரியாதையோடு இருந்திருக்கலாம். இன்று சங்கரி செய்த தவறுகளுக்கெல்லாம் தண்டனை கொடுக்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனைப் பயன்படுத்தி மக்கள் அவரைத் தண்டிக்க வேண்டும். (94)

# ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர் இஸ்ரேல் படையினரின் வான் தாக்குதலில் பலி!



(டெல்அவிவ்)

ஹ்மாஸ் தீவிரவாத அமைப்பின் ஆனமீகத் தலைவர் செயிக் அகமட் யசீனும் மற்றும் எட்டுப் பேர் இஸ்ரேலியப் படையினரின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயம் அடைந்துமுள்ளனர்.

நேற்று அதிகாலை - பள்ளிவாசலில் தொழுகையை முடித்துக்கொண்டு தனது இருப்பிடத்திற்கு அகமட் யசீன் சென்றுகொண்டிருந்தவேளையில இந்தச் சம்பவம் நடைபெற்றது.

ஆன்மீகத் தலைவர் செயிக் அகமட் யசீனின் மரணத்தின் மூலம், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன நரகத்திற்கான கதவைத் திறந்துள்ளதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே - பல ஆயிரம் பலஸ்தீனர்கள் எதிர்ப்பு ஊர்வலங்களை காஸாவில் நடத்தியுள்ளனர். ஆன்மீகத் தலைவர் அகமட்டின் மரணம் தொடர்பாக கருத்து வெளியிட்ட இஸ்ரேல் - பல இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதற்கு தனிப்பட்ட முறையில் அவர் காரணமாக அமைந்திருந்தார் எனத் தெரிவித்துள்ளது.

பல ஆயிரக்கணக்கானவர்கள் ஆன்மீகத் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்டிருந்தனர். ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் பச்சைநிற ஹமாஸ் கொடியினால் போர்த்தப்பட்டிருந்த பூதவுடல் கொண்ட பேழையைத் தொடுவதற்கு முண்டியடித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஆனமீகத் தலைவரின் படுகொலையினால் ஆத்திரமடைந்த ஹமாஸ அரசியல் தலைவர் அப்துல் அடைஸ் அல் ரன்ரிசி கருத்துத் தெரிவிக்கும போது, பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையே இஸ்லாமியத் தலைவரைக் கொலை செய்ததன்மூலம் போர் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதனிடையே - ஆன்மீகத் தலைவரின் மரணத்தை அறிந்த மக்கள் தெருக்களில் ஒன்றிணைந்து, பழிதீர்க்கப்போவதாக உறுதி எடுத்துக கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரே - இது ஆபத்து மிக்கதும், கோழைத்தனமானதுமான செயலெனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனின் நேரடி மேற்பார்வையில் இந்தப் படுகொலை நடத்தப்பட்டதென இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

## எல்.ஆர்.ஏ போராளிக்குழு மீது உகண்டாப் படையினர் தாக்குதல்

உகண்டாவின் வடபகுதியில் எல்.ஆர்.ஏ எனப்படும் போராளிக்குழுவொன்றின் 50 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் போராளிகள் சூடான் எல்லைக்கூடாக உகண்டாவிற்குள் பிரவேசித்து பொது மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வந்துள்ளனர்.

சென்றமாதம் லினா என்ற பிரதேசத்தில் அமைந்துள்ள முகாம் ஒன்றினுள் பிரவேசித்து 200 இற்கும் மேற்பட்ட அகதிகளை இவர்கள் படுகொலை செய்திருந்தனர்.

இந்தக் குழுவின் 17 ஆண்டுகால தாக்குதல்களில் மிகவும் கொடூரமான தாக்குதல் இதுவென முன்னர் தெரிவிக்கப்பட்டது. உகண்டாவின் இராணுவத்தினர் இந்தக் குழுவினரின் செயற்பாடுகளை நிறுத்தியுள்ளதாகத் தெரிவித்த போதும், உகண்டா மக்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தாக்குதல்களை எல்.ஆர்.ஏ போராளிகள் அடிக்கடி நடத்திவருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை 100 இற்கும் மேற்பட்ட எல்.ஆர்.ஏ போராளிகள் சூடானின் தென் பகுதியல் அமைந்துள்ள எல்லையூடாக உகண்டாவிற்குள் தாக்குதல் மேற்கொள்வதற்காக நுழைந்ததாகவும், அவ்வேளையில் உகண்டா படையினர் அவர்கள்மீது தாக்குதலை மேற்கொண்டதாகவும் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

மேலும், இந்தமாத ஆரம்பத்தில் சூடானிய போராளிக்குழுவொன்று எல்.ஆர்.ஏ இற்கு எதிராக தாக்குதல் ஒன்றை நடத்தியதாகவும் தெரிவித்திருந்தது.

# நேபாளத்தில் மாவோ போராளிகள் மீது அந்நாட்டுப் படையினர் கடும் தாக்குதல்!

## இரு பகுதியிலும் பாரிய உயிர்ச்சேதம்



(காத்மண்டு)

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவிலிருந்து 300 கி.மீற்றர் தொலைவிலுள்ள பெனி நகரத்தில் மாவோ தீவிரவாதிகளுக்கும், அரச படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் பெருமளவிலான மாவோ தீவிரவாதிகளும், படையினரும் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மாறுபட்டிருந்தபோதும் - 18 படையினரும், பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளதாகவும், 60 இற்கு மேற பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் இவர்களில அதிகமானவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் படையினர் மற்றும் உள்ளூர் அரச நிர்வாகிகள் உட்பட 90 இற்கு மேற்பட்டவர்கள் காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை உயிரிழந்தவர்கள் தொடர்பாக இராணுவத்தினர் தெரிவித்துள்ள தொகையில் வேறுபாடு காணப்படுகிறது. 500 மாவோ தீவிரவாதிகள் உயிரிழந்தும் 200 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் இராணுவ அதிகாரி திபத் குறுவ் தெரிவித்தார்.

பெனி நகரத்தைத் தாக்குவதற்கு மாவோ தீவிரவாதிகள் திட்டமிட்டுவருவதாக முன்னரே தகவல் கிடைத்ததால் 1500 இற்கும் 2000 இற்கும் இடைப்பட்ட மாவோ தீவிரவாதிகளை படையினர் எதிர்பார்த்துக் காத்திருந்ததாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.




## ஆப்கான் மேற்குப்பகுதியில் ஏற்பட்ட தாக்குதல்கள் கட்டுப்பாட்டில்!

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பிரதேச ஆளுநரின் படைக்கும், அரச படைகளுக்கும் இடையே நடைபெற்ற தாக்குதல்கள் ஆளுனரின் படைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். ஆப்கானிஸ்தான் விமானப் போக்குவரத்து அமைச்சர் மிர்வால் சாடிக்கின் மரணத்தின் பின்னர் இந்தச் சண்டை ஆரம்பித்திருந்தது.

அமைச்சர் சாடிக் கிரனைட் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார்.

அமைச்சரின் மரணத்திற்கு உள்நாட்டு இராணுவ அதிகாரி சகீர் ரஜேப்சடாப்தான் காரணமென ஆளுனர் ஸ்மெயில் கான தெரிவித திருந்தார்.

காபூலில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் கானின் படையினர் வன்முறைகளை நிறுத்தியுள்ளதாக தெரிவித்திருந்தனர்.

ஆளுனர் ஸ்மெயில் கான் ரஷ்யா - ஆப்கானிஸ்தான் மீது போர் நடத்தியபோது ரஷ்ய எதிர்ப்பு படையணி ஒன்றிக்கு தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் நடந்த குண்டுவெடிப்பு; அமெரிக்க சிப்பாய் உட்பட இருவர் பலி

(பாக்தாத்)

ஈராககின் தலைநகர் பாக்தாத்துக்கு மேற்கே உள்ள வீதியோரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் அமெரிக்க இராணுவச் சிப்பாயும், மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது, மூன்று அமெரிக்கப் படையினர் காயமடைந்ததாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவ ரோந்து அணி ஒன்றின்மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை, அபுகுரயப் மாவட்டத்தில் அமெரிக்காவின் முதலாவது கவசப்படை டிவிசன் ரோந்து அணி மீதும் நேற்று முன்தினம் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் மீண்டும் அமெரிக்கப் படையினர் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கத்தொடங்கியிருப்பது குறித்து அமெரிக்க நிர்வாகம் கூடிய கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் தருணத்தில் அமெரிக்கப் படையினருக்கு இழப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் திட்டங்களை வகுக்குமாறு இராணுவ அதிகாரிகளை பென்ரகன் பணித்திருப்பதாக செய்திகள் தெரிவித்தன.



# பயங்கரவாதத்தைத் தடைசெய்வதற்கு புஷ் தவறான வழியில் செயற்படுகின்றார்

## அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு



(வோஷிங்ரன்)

வெள்ளை மாளிகையின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் ரிச்சர்ட் கிளாக் பயங்கரவாதத்தைத் தடைசெய்வதற்கு ஜனாதிபதி புஷ் மேற்கொண்டுவரும் முயற்சிகளைக் கண்டித்துள்ளார்.

அல்கொய்டா அமைப்பினால் அமெரிக்காவிற்கு ஆபத்து நேரிடலாம் என்ற கருத்தினை செப்டெம்பர் 11 இற்கு முன்னரே தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால், ஜனாதிபதி புஷ் அந்தக் கருத்துக்களை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை எனவும் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன், ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்ற கருத்திற்கு எதிராக புஷ் செயற்பட்டதாகவும் ரிச்சர்ட் கிளாக் தெரிவித்தார்.

ஆனால், இன்று ஜனாதிபதி தேர்விற்கு போட்டியிடும் புஷ் - பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என தேர்தல் பிரசாரம் மேற்கொண்டுவருவதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

இதேவேளை, செம்டெம்பர் 11 தாக்குதலின் பின்னர் ஈராக்கில் அல்கொய்டா அமைப்பிற்கெதிரான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனான்ட் ரம்ஸ்பீல்ட் உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதி புஷ்ஷிற்கு எதிரான கருத்துக்களை வெள்ளை மாளிகை மறுத்துள்ளது.

இதேவேளை, பி.பி.ஸியின் செய்தியாளர் அடம் புறூக் கருத்துத் தெரிவிக்கும்போது - ரிச்சர்ட் கிளாக் பாதுகாப்புத்துறையில் நீண்ட காலம் அனுபவம் உள்ளவர் எனத் தெரிவித்தார்.

# வறுமையின் கொடுமையால் பெற்ற மகளை விற்ற தந்தை

வறுமையின் கொடுமை காரணமாக தான்பெற்ற ஒரு வயதுடைய பெண் குழந்தையை 200 ரூபாவுக்கு தந்தையொருவர் விற்றுள்ளார். நெஞ்சை நெகிழவைக்கும் இச்சம்பவம் நேபாள நாட்டில் இடம்பெற்றுள்ளது.

நேபாளத்தின் மேற்குப்பகுதியில் தாரு என்ற இனத்தவர் வசிக்கின்றனர். ஏழ்மையால் கொத்தடிமைகளாக இருந்த அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே மீட்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் துளசிராம். இவருக்கு 5 குழந்தைகள் இருக்கின்றனர்.

சமபத்தில் இவரது மனைவி இறந்துவிட்டாள். கடைசிப் பெண் குழந்தைக்கு ஒரு வயதே ஆகிறது. போதிய வருமானம் இன்மையால் குழந்தைகளை வளர்க்க சிரமப்பட்ட துளசிராம் தனது ஒரு வயதுப் பெண்குழந்தையைத் தானம் செய்ய முன்வந்தார்.

இதனையடுத்து பகதூர் செ[illegible]ரி தம்பதிகளுக்கு 200 ரூபாவுக்கு தனது ஒரு வயது பெண குழந்தையை விற்றுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வட-கிழக்கு அபிவிருத்திக்கு விசேட அதிகார சபை!

## ஜே.வி.பி. உறுதி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிகளின் அவசர புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு விசேட அதிகாரசபை ஒன்று அமைக்கப்படவிருப்பதாக ஜே.வி.பியின்பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது -

கடந்தகால யுத்த நடவடிக்கையினால் அழிவடைந்த வடக்கு - கிழக்குப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக விசேட அபிவிருத்தி அதிகாரசபையை ஜே.வி.பி. நிறுவும்.

வட-கிழக்குப் பகுதிகளில் யுத்த நடவடிக்கையினால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதுடன், மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளும், ஐஸ் தொழிற்சாலைகளும் அமைக்கப்படும்.

வட-கிழக்குக்கு மின்சாரத்தினை வழங்குவதற்காக மின் உற்பத்தி மையம் ஒன்றை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை - துறைமுக அபிவிருத்திப் பணிகள் துரிதமாக்கப்பட்டு புதிதாக மூன்று மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும்.

வட-கிழக்கில் 17 ஆயிரம் குடும்பங்களுக்கு குறைந்த செலவில் குடியியல் வசதிகளை ஏற்படுத்தி வட-கிழக்கை நான்கு கைத்தொழில் மையங்களாகப் பிரித்து அபிவிருத்தி செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## சமாதானம் நீடித்து நிலைக்க

# எதிர்வரும் பொதுத்தேர்தலில் தவறாமல் வாக்களியுங்கள்!

## மன்னார் ஆயர் வேண்டுகோள்

(மன்னார்)

சமாதானம் தொடர்ச்சியாக நிலைத்து, மக்கள் நன்மை அடைய வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, அதற்கு வழியமைக்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் தமது வாக்குகளைத் தவறவிடாமல் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு - மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை துண்டுப்பிரசுரம் மூலம் மனனார் மாவட்ட மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

நாம் எதிர்பார்க்கும் சமாதானம், சாந்தி, அமைதி, நிலைக்க எமது வாக்குகளை சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் உரிமைப் போராட்டத்துக்கு உழைப்பவர்களை அறிந்து நாட்டில் சமாதானம் நிலைக்க வாக்குகளைப் பிரயோகிக்க வேண்டும் என்று அந்தப் பிரசுரத்தின் மூலம் மன்னார் ஆயர் மேலும் கேட்டுள்ளார்.

### 12 வாக்காளருக்காக வாக்களிப்பு நிலையம்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய வரலாற்றில் முதல்தடவையாக 12 வாக்காளர்களுக்காக வாக்களிப்பு நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது.

வாவியால் சூழப்பட்ட மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையில் நீண்டகாலம் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்காகவே இந்த வாக்களிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.

மிகக்குறைந்த வாக்காளர்களைக் கொண்ட வாக்குச்சாவடி இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கு பல்கலைக்குச் செல்ல யாழ்.மாணவர்கள் பின்னடிப்பு!

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கு புதிதாக அனுமதிபெற்ற யாழ்.மாவட்ட மாணவர்கள் பின்னடிப்பதாகத் தெரியவருகிறது.

கிழக்கில் ஏற்பட்டிருக்கும் குழப்பமான சூழ்நிலையை அடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவின் குழுவினரால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பலர் மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்பதற்கு அனுமதிகிடைத்த பல யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் அங்கு பதிவினை மேற்கொள்ளச் செல்ல அச்சம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், அல்லது வேறு மாவட்டத்தில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு தமது அனுமதியை மாற்றித்தருமாறு கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அந்த மாணவர்கள் கடிதமனுப்பியுள்ளார்கள்.

இதுதொடர்பாக, நேற்று மாணவரொருவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஆலோசனை பெற்றுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (11)

# அனுமதியின்றிப் பிரசாரம்; ஓட்டோ நீதிமன்றில் தடுப்பு!

தென்மராட்சிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி பிரசார நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓட்டோவையும், ஒலிபெருக்கி சாதனங்களையும் தடுத்துவைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

நேற்று தென்மராட்சி பிரதேசத்தில் ஓட்டோ ஒன்றில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு, பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டவேளை நுணாவில் பகுதியில்வைத்து பொலிஸாரால் அந்த ஓட்டோ பரிசோதனை செய்யப்பட்டது.

இதன்போது தேர்தல் பிரசாரத்திற்கு ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை என்பது தெரியவந்தது.

இதன்போது ஓட்டோவும், ஒலிபெருக்கி சாதனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்படி ஓட்டோவையும், ஒலிபெருக்கியையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தடுத்துவைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (34)

# வட பகுதி கடற்படை...

வடபகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

இரண்டு நாட்கள் குடாநாட்டில் தங்கியிருந்த அந்த அதிகாரிகள் மண்டைதீவு, ஊர்காவற்துறை, புங்குடுதீவு, நயினாதீவு, காரைநகர், கிளாலி மற்றும் காங்கேசன்துறை ஆகிய கடற்படைத் தளங்களுக்கு விஜயம் செய்ததாக கடற்படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கடற்படையினரின் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக களநிலை அதிகாரிகளுடன் ஆராய்ந்தார். பிரதானமாக கடற்படையினர் விரைவாகச் செயற்படும் நிலை தொடர்பாகவும், பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பாகவும் மதிப்பீடுகள் செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கடற்படைத் தளபதி தலைமையிலான இந்தக் குழுவில் கடற்படையின் தொண்டர் படைத்தளபதி, கடற்படை இயக்குனர், புனர்வாழ்வு இயக்குநர் ஆகியோர் இடம்பெற்றிருந்ததாகத் தெரியவருகிறது.

கிளாலி முன்னரங்க நிலைகளில் கடற்படையினர் நிலை கொண்டிருக்கும், பகுதிகளுக்கும் கடற்படையினரின் காவலரண்களுக்கும் குழு விஜயம் செய்து நிலைகளை மதிப்பீடுசெய்தது.

# சுயேட்சை வேட்பாளர்....

தேர்தல் உத்தியோகத்தர் வன்னி மாவட்டச்செயலகம் என முகவரியிடப்பட்டுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சுயேட்சைக்குழு 5 வேட்பாளர் இல 6 இனையுடைய இரத்தினம் விக்னேஸ்வரமூர்த்தி ஆகிய நான் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் வன்னி மாவட்ட வேட்பாளர் பட்டியலில் சுயேட்சைக் குழு சார்பாக மனுவைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றிருந்தேன்.

ஆயினும் தற்போது சுகவீனம் காரணமாகவும் தேர்தலுக்கான செலவீனங்களைச் சமாளிக்கமுடியாத காரணத்தினாலும் யாருடைய வற்புறுத்தலுக்கோ, மிரட்டலுக்கோ அன்றி எனது சுயவிருப்பின் பேரில் சுயேட்சைக்குழுவின் சார்பில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவை மீளப்பெறவுள்ளேன்.

எனவே இதற்கான தேர்தல் சட்டங்களுக்கு அமைவான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (03)

### புலிகளின்...

தரவேண்டுமெனவும் அவர்கள் மக்களை எச்சரிக்கை செய்துள்ளனர். (07)

### பல்கலைக்கழக மாணவ...

இது தொடர்பாக உரிய நடவடிக்கையை எடுக்குமாறு யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் - சித்திரமும் வடிவமைப்பும் துறையினர்க்கு பணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கிழக்கு...

கடற்படைத் தளபதியாகவும், றியர் அட்மிரல் சரத் ரட்ண கீர்த்தி வடமத்திய கடற்படைக் கட்டளைத் தளபதியாகவும், றியர் அட்மிரல் சரத் வீரசேகர கடற்படை நடவடிக்கை இயக்குனராகவும், றியர் அட்மிரல் தர்மப்பிரிய வடக்கு கடற்படைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டிக்கின்றார்கள்.

### பல்கலைக்கழக...

எனினும், எதிர்வரும் 27 ஆம் திகதி பட்டமளிப்பு விழா திட்டமிட்டபடி நடைபெறும் என்பதில் யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் உறுதியாக இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### விடுதலை...

அனுப்பியிருந்தார். இந்த மனுவைத் தான் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் திகதி பொடா மறு ஆய்வுக் குழுவுக்கு மத்திய அரசு அனுப்பியிருப்பதாகவும் இதையே பரிசீலனை செய்யவிருப்பதாகவும் சக்காரியா மேலும் தெரிவித்தார்.







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.